# நகல்

# இலங்கைக்கான பேண்தகு நுகர்வு மற்றும் உற்பத்தி தொடர்பான தேசியக் கொள்கை

மார்ச் 2018

## 1. கொள்கையின் பெயர்

இலங்கைக்கான பேண்தகு நுகர்வு மற்றும் உற்பத்தி தொடர்பான(SCP) தேசியக் கொள்கை

## 2. அமுலாக்கத் திகதி

அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப் பெற்றதும் குறிப்பிடப்படும்

## 3. பின்னணி

இலங்கையில் கடந்த சில தசாப்தங்களில் ஏற்பட்ட பொருளாதார அபிவிருத்தி கடும் வறுமை நிலையை இல்லாதொழித்த அதேவேளை, நடுத்தர வருமானமீட்டும் நாடு என்ற அந்தஸ்தை அடைவதற்கு இத்தேசத்திற்கு உதவியுள்ளது. எனினும், அதனுடன்கூடவே வருமான ஏற்றத்தாழ்வினை உயர்த்தியமை, சமூக பிரச்சினைகள் மற்றும் தேசிய வளங்களின் சமனற்ற நுகர்விலான அதிகரிப்பு மற்றும் பாதகமான சூழல் தாக்கங்களைக் கொண்டிருத்தல் ஆகியனவும் சேர்ந்து வந்தன. பின்னையது மக்கள் தொகை அதிகரிபபினாலும் துரித நகரமயமாக்கலினாலும் மேலும் மோசமாக்கப்பட்டு, ஆள் ஒருவருக்கு கிடைக்கக்கூடியதாக இருக்கும் இயற்கை வளங்களில் ஒரு வீழ்ச்சிக்கு இட்டுச்சென்றது.

இலங்கையின் தற்போதைய இலட்சிய வேட்கைகொண்ட அபிவிருத்தி முனைப்பானது, நகர்ப்புறம் மற்றும் கிராமப் புறம் ஆகிய இரண்டிலும் பாரம்பரிய இலங்கை வாழ்க்கைப் முறையில் துரிதமாக ஊடுறுவல் செய்கின்றது. 1999 ஆம் ஆணடிற்கும் 2010 ஆம் ஆண்டிற்குமிடையில், நகர்ப்புற மக்கள் தொகைக்கு உரியதான இரவு நேர மின்விளக்கு தரவுகளைப் பயன்படுத்தி அளக்கப்பட்டவாறு இலங்கைதான் இப்பிராந்தியத்தில் மிகவும் வேகமான நகர்ப்புற விரிவாக்கத்தைக் கொண்ட நாடாகும். நகர்ப்புற மக்கள் தொகையோடு தெடர்புபட்ட நகர்ப்புற துரித விவரிவாக்கம் இலங்கையின் நகர அபிவிருத்தியின் அம்சமாகத் திகமும் வீதியோரம் விரிந்து பரந்து கிடக்கும் வீட்டுத்தொடர் விருத்தியைப் பிரதிபலிக்கின்றது [1] ; kf;fs; rpwe;j cl;fl;likg;G trjpfisAk;> jkJ gps;isfSf;F rpwe;j fy;tpiaAk;;> njhopy; tha;g;Gfs; Kjypatw;iwAk; Njb efuq;fSf;Fr; nry;fpd;wdu;. ,e;j vz;zpf;if ehl;by; jw;NghJ epyTk; rkhjhdk; kw;Wk; cWjpj;jd;ik Mfpatw;wpdhy; mjpfupf;Fnkd vjpu;ghu;f;fg;gLfpwJ.

பேணமுடியா நுகர்வு மற்றும் உற்பத்தி முறைகளோடு இந்நகரமயமாதல் பரவி வருகிறது. நடுத்தர வருமானமீட்டும் நிலைக்கு வளர்ச்சியுறும் மக்களின் அபிலாசைகள் அனைத்து பிரசைகளினதும் நுகர்வு மற்றும் உற்பத்தி நடத்தையை மாற்றியமைக்கும். இலங்கை போன்ற ஒரு வளர்ந்து வரும் நாட்டின் பொருளாதாரம் துரிமாக வளர்ச்சியடையும்போது, அது நீண்டகால பொருளாதார வளரச்சியைப் பேணுவதற்குத் தேவைப்படுவதும் கிடைக்கக்கூடியதாக இருப்பதுமான இயற்கை வளங்களுக்கு அப்பால் விரிவடைந்து செல்லும் என்பதோடு, அதன் நடைமுறைகள் எப்போதும் பெரிதும் விரயமானதாக இருக்கும். காலம் செல்லச் செல்ல, தொழிற்சாலை கழிவுநீரைச் சுத்தப்படுத்துவதற்கும் நஞ்சை உறிஞ்சி உள்ளீர்ப்பதற்குமான அதன் ஆற்றல் அதன் உச்ச எல்லையை அடைந்து பின்னர் சரிவடைந்து கணிசமான உயிர் பன்மைத்துவ இழப்பையும் உயிர்கள் வாழ்வதற்கு உறுதுணையான சூழல் முறைமைகளின் இழப்பையும் ஏற்படுத்தும்.

() http://srilankanscientist.com/colombo-air-too-is-polluted-says-who/

(2)குடும்பவருமானம் மற்றும் செலவு ஆய்வு – 2006/07, குடித்தொகை மதிப்பீட்டு திணைக்களம், இலங்கை

வலு, நீர் மற்றும் பிரதேசங்களில் நீர் விரையமாதல் ஆகியவறறுக்கு உரிய கவனம்

செலுத்தப்படவேண்டும் என்பதையும் இலட்சியவேட்கைமிக்க இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டதென்பதையும் தற்போதைய இலங்கை சூழல் கொள்கை ஆவணம் ஏற்கெனவே வெளிச்சமிட்டுக் காட்டியது. எனினும், இவ்விலக்குகளில் பெரும்பாலானவை இன்னும் அமுல்படுத்தப்படவில்லை. பிரதானமாக திறந்தவெளி (குப்பை) கொட்டுமிடங்களைப் பயன்படுத்தும் மாநகர தின்மக் கழிவு முகாமைத்துவம் (MSW) இலங்கையில் இன்னும் ஒரு முக்கிய சூழல் கரிசனையாக உள்ளது. MSWஐ அகற்றுவதற்கு ஒரு விரிவான செயல் திட்டமும் உட்கட்டமைப்புகளும் இல்லை. இது, பல சூழல் தீங்குகளை ஏற்படுத்தியுள்ளது. துரித நகரமயமாக்கல் மற்றும் கைத்தொழில் மயமாக்கல் ஆகியவற்றினால் நகர்ப் புறங்களில் காற்று மாசடைதல் ஒரு பாரதூரமான பிரச்சினையை ஏற்படுத்துகிறது. பல்வேறு இடங்களில் மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான காற்றுத் தர கண்காணிப்பு காற்று மாசடைதல் அதிகரிப்பதைக் காட்டுகிறது. ஓசோன்,$SO_2$ மற்றும் சிறு துணிக்கைகள் ஆகியன பிரதான நகரங்களில் உலக சுகாதார நிறுவனத்தின் (WHO) நியமங்களை விஞ்சுகின்றன.(1) நீர் மாசடைதல் இலங்கையில் கிடைக்கக்கூடிய பாதுகாப்பான குடிநீரை கடுமையாகப் பாதிக்கின்றது. இலங்கையில் உள்ள ஏறத்தாழ 86 வீதமான குடும்பங்கள் பாதுகாப்பான குடிநீரைப் பயன்படுத்துகின்றன. வதிவிடப் பிரதேசங்களைப் பொறுத்து பாதுகாப்பான குடிநீர் தொடர்பாக வேறுபாடுகள் நிலவுகின்றன. நகர்ப்புறங்கள் மற்றும் பெருந்தோட்டப் பகுதிகள் தொடர்பாக, நகர்ப்புறங்களில் 97.2 வீதமான குடும்பங்களும் பெருந்தோட்டத் துறையில் 50.6 வீத குடும்பங்களும் பாதுகாப்பான குடிநீரைப் பயன்ப,டுத்துகின்றன. (2) அபிவிருத்தி அடைந்த நாடுகளோடு ஒப்பிடுகையில் இலங்கை புவி வெப்பாதலுக்கு மிகக் குறைவாக பங்களிப்புச் செய்யும் ஒரு நாடாகும். எனினும், அது உலக் காலநிலை மாற்றத்தின் தாக்கங்களினால் மிக அதிகமாக பாதிப்படையக்கூடியதாக உள்ளது. விவசாயாக நிலங்களின் ஒரு பெரும் பகுதியை இழப்பதற்கு காலநிலை மாற்றம் ஒரு காரணமாகும்.

பேணமுடியாத அபிவிருத்தியின் பாதகமான தாக்கங்களை உணர்ந்தும், சர்வதேச சமூகத்தோடு கைகோர்த்தும் இலங்கை அரசாங்கம் பேண்தகு நுகர்வு மற்றும் உற்பத்தி (SCP) தொடர்பான 10 ஆண்டு நிகழ்ச்சித திட்ட வரைச்சட்டகம் மற்றும் பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் கொண்ட 'பேண்தகு அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சிநிரல் ஆகியவை அடங்கலாக உலக "நிகழச்சி நிரல் 21" மற்றும் "றியோ+20 விளைவுகள்"ஆகியவற்றை அங்கீகரித்துள்ளது.

***நியாயப்பாடு***

பேண்தகு நுகர்வு மற்றும் உற்பத்தி (SCP) பொருளாதார அபிவிருத்தி மற்றும் சமூக நலனோம்புகை ஆகிவற்றை இலக்காகக் கொண்டுள்ள அதேவேளை, சூழலைப் பாதுகாத்து பேண்தகு முறையில் இயற்கை வளங்களை முகாமைத்துவம் செய்யும்.

பேண்தகு நுகர்வு மற்றும் உற்பத்தியை (SCP) ஊக்குவிப்பதானது, சூழல் மற்றும் சமூக தேவைகளுக்கு இசைவான நீண்டகால பொருளாதார வளர்ச்சியை எய்துவதில் தங்கியிருக்கும் பேண்தகு அபிவிருத்தியின் இன்றியமையாததோர் உள்அம்சமாகும். பேண்தகு நுகர்வு மற்றும் உற்பத்தியை (SCP) ஊக்குவிப்பது பாதகமான சூழல் மற்றும் சமூக வெளிக் காரணிகளை மட்டுப்படுத்துவதற்கும் பேண்தகு உற்பத்திகள் மற்றும் சேவைள் ஆகியவறிற்கு சந்தை வாய்ப்புகளை வழங்குவதற்கும் அதேபோன்று முக்கியமானதாகும்.

வாழ்க்கைத் தரத்தை, குறிப்பாக வசதிவாய்ப்புகளற்றோரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும், உணவு, உறைவிடம், உடல்நலம், நடமாட்டம் மற்றும் கல்விச் சேவைகள் ஆகியவற்றுக்கான வாய்ப்புகள் அடங்கலாக அனைத்து அடிப்படைத் தேவைகளையும் வழங்குவதற்கும், சூழல் முறைமையின் தாங்கும் கொள்ளளவை பேணுகின்ற அதேவேளை, அபிவிருத்தியைப் பாதுாக்குமுகமாக பொருளாதார வளர்ச்சியை சூழல் சீரழிவிலிருந்து விடுவவிப்பதற்கும் ˙ SCP தேவை.

குறைவான வளங்கள், கழிவு மற்றும் வெளிவிடல் ஆகியவற்றோடு கூடிய செழிப்பைப் அடைவதற்கான பொறிமுறைளை SCPவழங்குகிறது. SCP ஒரு முத்தரப்புக்கு வெற்றி வாய்ப்பை வழங்குகின்றமையினால் அது பொருத்தமானதாகும்: மக்களுக்கு, இலாபத்திற்கு மற்றும் புவிக்கு. SCP யை கடைபிடிப்பது கைத்தொழில்களுக்கு ஒரு தெளிவான வியாபார விடயமாகும் என்பதோடு, நுகர்வோருக்கான மிகச் சிறந்த வர்த்தக விளைவாகும். வளங்களின் வினைத்திறன்மிக்க பாவனைமூலம் உற்பத்தித்திறனை அதிகரிப்பதிலும் சேமிப்பு மூலமான பணத்திற்கான பெறுமதி மற்றும் தரம் ஆகியவற்றிலும் SCPகவனத்தைக் குவிக்கின்றது. பசுமைப்

பொருட்கள் மற்றும் தொழில்நுட்பங்களிலான இலாபத்தை SCP ஆதரிக்கின்றது.

SCP வளங்கள் மற்றும் வலு வினைத்திறனை ஊக்குவிப்பது, பேண்தகு உட்கட்டமைமப்பு ஆகியவற்றை வழங்குதல் மற்றும் அடிப்படை சேவைகள், பசுமை மற்றும் கௌரமான தொழில், அனைவருக்கும் சிறந்த வாழ்க்கை தரம் ஆகியவற்றுக்கு வாய்ப்புகளை வழங்குவது தொடர்பானதாகும். அதன் அமுலாக்கம் ஒட்டுமொத்த அபிவிருத்தித் திட்டங்களை எய்துவதற்கும் எதிர்கால பொருளாதார, சூழல் மற்றும் சமூக செலவுகளை குறைப்பதற்கும் பொருளாதார போட்டித்தன்மையை வலுப்படுத்தி வறுமையைக் குறைப்பதற்கும் உதவும்.

SCPவாழ்க்கைத் தரத்தை அதகரிக்கும் அதேவேளை, வளங்களின் பாவனை, சீரழிவு மற்றும் முழு உயிர்ச் சங்கிலியிலும் மாசடைதல் ஆகியவற்றைக் குறைப்பபதன்மூலம் பொருளாதார செயற்பாடுகளிலிருந்தான நிகர நலனோம்பப் பயன்களை அதிகரித்து “குறைந்தவற்றுடன் கூடிய பொருளாதார மற்றும் சூழல்நேய முறையில் செய்வதை” இலக்காகக் கொண்டுள்ளது.

இந்த நோக்கத்தை அடைவதற்கு உற்பத்தியையும் நுகர்வையும் சமகாலத்தில் கையாள்வதின் முக்கியத்துவத்தை SCPஅங்கீகரிக்கின்றது. பசுமை மற்றும் நியாய உற்பத்திகளுக்கான பயன்மிக்க கோரிக்கையின்றி, உற்பத்தி சூழல்நேய வழக்கங்களையும் உற்பத்திகளையும் வழங்காது. இதற்குள்ள ஒரு முக்கிய தடை விழிப்புணர்வின்மையும் நுகர்வோர் குழுக்களை வலுப்படுத்தாமையுமாகும் - இது கையாண்டு தீர்க்கப்படவேண்டும். SCPஒரே நாணயத்தின் இரு பக்கங்களாகப் பார்க்கப்படலாம். இரு அம்சங்களும் ஒன்றன் குறையை மற்றையது நிறைவு செய்து பரஸ்பரம் ஒன்றையொன்று வலுப்படுத்துகின்றன: பேண்தகு உற்பத்திகளுக்கான கோரிக்கையை தூண்டுவது உற்பத்தி முறைகளை பாதிப்பதோடு, பேண்தகு உற்பத்திகள் கிடைக்கக்கூடியதாகவிருப்பது கேள்வியை மேம்படுத்தும்.

அது வியாபாரிகள், நுகர்வோர், கொள்கை வகுப்போர், ஆய்வாளர்கள், விஞ்ஞானிகள், சில்லறை வியாபாரிகள் மற்றும் ஊடகம் உள்ளிட்ட பல்வேறு பங்கீடுபாட்டாளர்களை உள்ளடக்குவதோடு, உற்பத்தியாளர் தொடக்கம் இறுதி நுகர்வோர் வரையில் வழங்கல் சங்கிலியில் தொழிற்படும் இப்பங்கீடுபாட்டாளர்கள் அனைவர் மத்தியிலும் முறையான அணுகுமுறையையும் ஒத்துழைப்பையும் வேண்டி நிற்கிறது. பேண்தகு நுகர்வு மற்றும் வாழ்க்கை முறைகள் தொடர்பான விழிப்புணர்வு மற்றும் கல்வி ஆகியவற்றின் மூலமும் நியமங்கள் மற்றும் குறியீடுகள் மூலம் நுகர்வோருக்கு போதுமான தகவல்களை வழங்கியும் பேண்தகு பொது பெறுகையில் ஈடுபட்டும் நுகர்வோரை ஈடுபடுத்துவதை அது கொண்டிருக்கிறது.

### *தேவை*

இலங்கையில் தொடர்புபட்ட துறைசார் கொள்கைகளோடு இயைந்தமைந்ததும் ஒன்றிணைக்கப்பட்டதுமான பேண்தகு நுகர்வு மற்றும் உற்பத்தி தொடர்பான அனைத்திலும் வியாபிக்கும் ஒரு தேசிய கொள்கைதான் பொருளாதார மற்றும் பேண்தகு அபிவிருத்தி எனும் விரும்பப்படும் இலக்கை அடைவதற்கான தேவையாகும்.

### *நோக்கமும் சூழலும்*

அனைத்து முக்கிய அமைச்சுக்களையும் சம்பந்தப்பட்ட சமூக பங்கீடுபாட்டாளர்களையும் ஈடுபடுத்தும் ஒரு இடைத்தொடர்பு நடைமுறையூடாக இக் கொள்கை விருத்தி செய்யப்படும். கவனிக்கப்படாது விடப்பட்டால் எமது பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களைப் பாதிக்கும் முக்கிய பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அதன் ஆணைப்பணி கவனத்தைக் குவிக்கின்றது. தூய காற்றும் தூய மற்றும் போதுமான நீர் வழங்கலும் எல்லோருக்கும் கிடைக்கக்கூடியதாக இருக்க வேண்டும். நாட்டின் விலைமதிப்பற்ற இயற்கை மரபுரிமையான வனவிலங்குகளும் தாவரங்களும் சீரழிவதற்கு இடமளிக்கப்படக் கூடாது. நகரங்கள் தூய்மையாக இருக்க வேண்டுமென்பதோடு, அவை அனைத்து நகரவாசிகளுக்கும் ஒரு ஆரோக்கியமான சூழலை வழங்க வேண்டும். கைத்தொழில்கள் சூழல் மாசடைதலைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு கற்றுக்கொள்ள வேண்டும். இத் தீவின் மட்டுப்படுத்தப்பட்ட நிலமும் நன்னீர் வளங்களும் அதி கூடிய அளவிற்கு பயன்படுத்தப்பட வேண்டும். இத் துறைகளைக் கவனிப்பதற்கான நடவடிக்கைகள் கொள்கைக் கூற்றுக்களிலும் கொள்கையின் முக்கிய கருப்பொருள்களின்கீழ் விளக்கப்பட்டுள்ள இலக்குகளிலும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இக்கொள்கை இயற்கை வளங்களின் வினைத்திறன் மிக்கதும் பயனுறுதிமிக்கதுமான பயன்படுத்தலின்

வாயிலாக நாட்டின் பொருளாதார அபிவிருத்தி முயற்சிகளின் பேண்தகு தன்மையை மேம்படுத்த ஒரு பயனுறுதி மிக்க வரைச் சட்டகத்தையும் தேவையான உந்துகைகைகளையும் வழங்கும்.

உற்பத்திச் செலவுகளைக் குறைத்தல், புதிய மற்றும் வள வினைத்திறன்மிக்க உற்பத்திகளை உருவாக்குதல், புதிய சந்தைகள் மற்றும் தொழில்கள், ''பின்னர் சுத்தம் செய்தல்'' எனும் நடவடிக்கைகளுக்கான செலவுகளைக் குறைக்கும் மாசடைதல் தடுப்பு, பேண்தகு வாழ்க்கை முறை முதலிய வாய்ப்புகள் மற்றும் எல்லாவற்றிற்கும் மேலாக நவீன, குறைந்த காபன்கொண்ட, வள வினைத்திறன்மிக்க மற்றும் சூழல் ரீதியாக பேண்தகு தொழில்நுட்பங்கள் விரைந்து விருத்தியுறுவதற்கான வாய்ப்பு போன்ற பல வாய்ப்புகளை இக்கொள்கை வழங்கும். இது, தனித்துவம் மிக்க உயிர் பன்மைத்துவ செல்வத்தின் ஒரு பாதுகாவலர் என்ற அதன் மதிப்பை பாதுகாக்கும் அதேவேளை, உலகச் சந்தையில் இலங்கையின் போட்டித் தன்மையையும் மேம்படுத்தும்.

இக்கொள்கையானது, இதுவரை தனிமைப்படுத்தப்பட்ட அல்லது ஒரு பொதுவான வடிவத்தின்கீழ் தனியொரு ஆவணத்தில் துருவப்படுத்தப்பட்டிருந்த அனைத்து தற்போதைய சம்பந்தப்பட்ட துறைசார் கொள்கைகளினதும் SCPஅம்சங்களைக் கொண்டுவரும் அதேவேளை, இலங்கையில் வேறு தொடர்புடைய தேசிய துறைசார் கொள்கைகளை மேம்படுத்துவதற்குத் தேவையான நெறிப்படுத்தலையும் வழிகாட்டுதலையும் வழங்குகிறது.

## 4. கொள்கை கோட்பாடுகள், கொள்கை கூற்றுகள் மற்றும் கொள்கை இலக்குகள்

### 4.1 அனைத்திலும் வயாபிக்கும் கொள்கை வரைச்சட்டகம்

சமூக பொருளாதார அபிவிருத்தி மிக முக்கியமாகவிருக்கும் அதேவேளை, இயற்கை வளங்களை பாதுகாத்தல், சூழலைப் பாதுகாத்தல் மற்றும் இயற்கை பூமிக்கு வழங்கியிருக்கும் இச்சொத்துக்களை அறிவுபூர்வமாகப் பயன்படுத்தல் ஆகியனவும் அதேபோன்று அவசியமாகும். இது இன்று வளங்களை விவேகமான முறையில் பயன்படுத்தி பேண்தகு அபிவிருத்தியை வலியுறுத்துவதை வேண்டிநிற்கிறது. இவ்வாறு செய்வது அவ்வளங்களை பாதுகாப்பதோடு, எதிர்காலத்திற்காக அவற்றை மேம்படுத்தும்.

பேண்தகு நுகர்வும் உற்பத்தியும் (SCP) தற்போதிருக்கும் கொள்கைகளுக்கு இசைவானதாகவிருக்கும். எனினும், அதேவேளை,SCP ஐ ஒரு கவனிப்பாரற்ற மூலையிலிருந்து பிரதான நீரோட்ட நிலைக்கு உயர்த்தும். இந்த SCP கொள்கை தேசிய கொள்கைகள், அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் சர்வதேச ஒப்பந்தங்கள் ஆகியவற்றுக்கு மேலதிகமானதாகும்.

### 4.1.1 SCP கொள்கைக் கோட்பாடு

அனைத்து பொருளாதார துறைகளிலும் பயன்படுத்தப்படும் இயற்கை வளங்கள் மற்றும் நச்சுத் தன்மை கொண்ட பொருட்கள் மற்றும் உருவாக்கப்படும் கழிவு மற்றும் மாசுகள் ஆகியவற்றை உற்பத்தி மற்றும் நுகர்வு நடைமுறை முழுவதும் இயன்றவரை குறைத்தல்.

### 4.1.2 SCP கொள்கை கூற்றுகள்

1. எதிர்கால சந்ததியினரின் வளத் தேவைகளை விட்டுக்கொடுக்காது, சூழல் சீரழிவை இயன்றவரை குறைத்து வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தல்

2.

   * தற்போதைய பொருளாதார நடவடிக்கைகளின் பொருள்வழி/வலு அடர்த்தியைக் குறைத்தல் மற்றும், பயன்படுத்தல், உற்பத்தி, நுகர்வு மற்றும் அகற்றுதல் ஆகியவற்றிலிருந்தான வெளியிடுகை மற்றும் கழிவு ஆகியவற்றைக் குறைத்தல்
   * வாழ்க்கைத் தரத்தை விட்டுக்கொடுக்காது பொருட்கள் மற்றும் சேவைகள் தொகுதியொன்றை நோக்கி நுகர்வு முறைமைகளை மாற்றுதல்

வாயிலாக பொருளாதார வளர்ச்சியை சூழல் சீரழிவிலிருந்து விடுவித்தல்

3. உற்பத்தி மற்றும் நுகர்வு நடைமுறையின் அனைத்து வாழ்க்கை வட்ட கட்டங்களிலுமிருந்தான தாக்கங்களை கருத்தில் கொள்ளும் வாழ்க்கை வட்ட சிந்தனையைப் பிரயோகித்தல்

4. நுகர்வில் ஏற்படும் அதிகரிப்புகளினால் வினைத்திறன் பயன்கள் அழிவுறுமிடத்து திரும்பி வரும் தாக்கத்துக்கெதிராக பாதுகாத்தல்.

### 4.1.2 SCP அனைத்திலும் வியாபிக்கும் கொள்கை இலக்குகள் (Overarching Policy Goals)

- 2030 ற்குள், பேண்தகு முகாமைத்துவத்தையும் இயற்கை வளங்களின் வினைத்திறன் மிக்க பாவனையையும் எய்துதல்
- 2030 ற்குள், தலைக்குரிய உலக உணவு விரயத்தை சில்லறை வியாபாரம் மற்றும் நுகர்வு மட்டங்களில் அரைவாசியாக குறைத்தல் மற்றும், அறுவடைக்குப் பிந்திய இழப்புகள் உள்ளிட்ட உற்பத்தி மற்றும் வழங்கல் சங்கிலியில் உணவு இழப்புக்களைக் குறைத்தல்
- 2020 ற்குள், ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச வரைச்சட்டகத்துக்கமைவாக இரசாயனப் பொருட்கள் மற்றும் அனைத்துக் கழிவுகள் ஆகியவற்றின் சூழல் ரீதியான உறுதியான முகாமைத்துவத்தை அவற்றின் வாழ்க்கை வட்டம் முழுதும் அடைதல் மற்றும், மானுட சுகாதாரம் மற்றும், சூழல் ஆகியவற்றின் மீதான அவற்றின் பாதகமான தாக்கங்களை ஆகக் கூடியளவு குறைக்குமுகமாக காற்று, நீர் மற்றும் நிலம் ஆகியவற்றில் அவை விடுவிக்கப்படுவதைக் குறைத்தல்.
- 2030 ற்குள், தடுத்தல், குறைத்தல் மீள்சுழற்சி மற்றும் மீள் பாவனை ஆகியவற்றினூடாக கழிவு உருவாக்கத்தைக் கணிசமாகக் குறைத்தல்.
- கம்பனிகள், குறிப்பாக பெரிய மற்றும் நாடுகடந்த கம்பனிகள் பேண்தகு வழக்கங்களைக் கையாளவும் தமது அறிக்கையிடும் சுழற்சியில் பேண்தகு தன்மை பற்றிய தகவல்களை உள்ளடக்கவும் ஊக்குவிக்கப்படுதல்
- தேசிய கொள்கைகள் மற்றும் முன்னுரிமைகளுக்கமைவாக, பேண்தகு தன்மை கொண்ட பொதுப் பெறுகை வழக்கங்களை ஊக்குவித்தல்
- 2030 ற்குள், இயற்கையோடு இசைவானதான வாழ்க்கை முறை மற்றும் பேண்தகு அபிவிருத்தி தொடர்பான உரிய தகவல்களையும் விழிப்புணர்வையும் எல்லா இடங்களிலும் வாழும் மக்கள் கொண்டிருப்பதை உறுதிப்படுத்தல்
- மேலும் கூடிய பேண்தகு நுகர்வு மற்றும் உற்பத்தி முறைகளை நோக்கி நகருமுகமாக விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப திறனை வலுப்படுத்தல்
- தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதும் உள்நாட்டு கலாசாரம் மற்றும் உற்பத்திகளை ஊக்குவிப்பதுமான பேண்தகு சுற்றுலாவிற்கான பேண்தகு அபிவிருத்தி தாக்கங்களை கண்காணிப்பதற்கான கருவிகளை விருத்தி செய்து அமுல்படுத்துதல்
- அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் விசேட தேவைகளை முழுமையாக கவனத்தில்கொண்டும் அவற்றின் அபிவிருத்திமீது ஏற்படக்கூடிய தாக்கங்களை வறிய மற்றும் பாதிக்கப்படும் சமூகங்களைப் பாதுகாக்கும் முறையிலும், வரிகளை மீள்கட்டமைத்தும், தீங்குவிளைவிக்கும் மானியங்கள் நிலவுகின்ற இடங்களில் அவற்றை கட்டங் கட்டமாக்கியும் தேசிய சூழ்நிலைகளுக்கமைய சந்தை திரிபுபடுத்தலை நீக்குவதன்மூலம் விரயமிக்க நுகர்வை ஊக்குவிக்கும் வினைத்திறனற்ற எண்ணெய் எரிபொருள் மானியங்களை, அவற்றின் சூழல் தாக்கங்களை பிரதிபலிக்குமுகமாக நியாயபூர்வமாதாக்குதல்.

### 4.2 முக்கிய தொனிப்பொருள்களுக்கானSCP

SCPகொள்கைளேடு தொடர்புடைய 46 தேசிய துறைசார் கொள்கைகளையும் (நிரல் இணைக்கப்பட்டுள்ளது), SCP மற்றும் பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் (SDGs)ஆகியவற்றோடு தொடர்புடையதும் இலங்கை கைச்சாத்திட்ட சர்வதேச உடன்படிக்கையுமான ஹரித்தலங்கா செயற்றிட்டத்தையும் மீளாய்வு செய்த பின்னர், 17 SDGsக்கு கீழ் வரும் தொடர்புடைய துறைகளை ஒன்றிணைத்து பத்து (10) முக்கிய தொனிப்பொருட்கள் - கீழே காட்டப்பட்டவாறு – தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இப் பத்து (10) முக்கிய தொனிப்பொருள்களும் (முக்கிய சூழல் பிரச்சினைகள், முன்னுரிமை பொருளாதாரத் துறைகள்) மூன்று (3) ஊடறுக்கும் உதவும் கொள்கைகளும் தற்போதைய நிலைமையின் அடிப்படையில், SCP தற்போதுள்ள ஒவ்வொரு கொள்கையிலும் ஒன்றிணைக்கப்பட்டு ஒழுங்குமுறைப்படுத்தப்பட வேண்டுமென்றும் ஒவ்வொரு பொருளாதாரத் துறைக்கும் பொருத்தமானதாக இருக்க வேண்டுமென்றும் மட்டுப்படுத்தாது, குறுகிய காலத்திற்கும் நடுத்தர காலத்திற்குமான SCPகொள்கைக்கான கவனக்குவிப்புத் துறைகளாக இனங்காணப்படும். எனவே, முக்கிய தொனிப்பொருள்களின் இற்றைப்படுத்தல் ஒவ்வொரு ஐந்து வருடத்திற்கும் ஒருமுறை செய்வதென திட்டமிடப்பட்டுள்ளது.

| *சுற்றாடல் கருப்பொருள்* | *பொருளாதாரத் துறைகள்* | *உதவும் கொள்கைகளும் மூலோபாயங்களும்.* |
|---|---|---|
| காற்று நீர் மற்றும் துப்பரவேற்பாடு வலு கழிவு | கைத்தொழில் | கல்வியும் தொடர்பாடலும் |
| | உணவு கட்டுமாணம் மற்றும் நிர்மாணம் போக்குவரத்து சுற்றுலா சுகாதாரம் | விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் |
| | | பொதுப் பெறுகை |

சுட்டிக்காட்டும் கொள்கை கோட்பாடுகள், அறிக்கைகள் மற்றும் இலக்குகள் ஒவ்வொரு முக்கிய தொனிப்பொருளுக்கும் - பின்ணைப்பு 2 ஐப் பார்க்க - இனங்காணப்பட்டுள்ளன. அவை பொறுப்பளிக்கப்பட்டுள்ள தலைமைதாங்கும் அமைச்சினால் ஆதரவு வழங்கும் சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் மற்றும் பங்கீடுபாட்டாளர்கள் ஆகியோருடனான நெருக்கமான ஒத்துழைப்புடன் விருத்திசெய்யப்படவுள்ள SCP செயற்றிட்டங்களில் மேலும் விளக்கப்பட வேண்டும். செயற்றிட்டங்கள் இக் கொள்கை அங்கீகரிக்கப்பட்டு அமுலுக்கு வந்த குறைந்தது ஒரு வருடத்திற்குப் பின்னராவது தயாராக வேண்டும்.

பல்வேறு SDGs களுக்கிடையிலான இடைத் தொடர்புகளை அங்கீகரிப்பதும் அதன்மூலம் வேறு SDGsகளின் அமுலாக்கத்திற்கான திட்டங்களுடன் ஒவ்வொரு முக்கிய கருப்பொருளையும் விருத்தி செய்தலை ஒருங்கிணைத்தலும் முக்கியமானதாகும்.

## 5. பிரயோகத்தன்மையும் நோக்கெல்லையும்

அனைத்திலும் வியாபிப்பதும் ஊடறுப்பதுமான ஒரு கொள்கையான SCP தொடர்பான இத்தேசிய கொள்கை ஏதேனும் வடிவத்தில் பொருட்கள் அல்லது சேவைகளின் நுகர்வு அல்லது உற்பத்தி சம்பந்தப்படடுள்ளவிடத்து எல்லாத் துறைகளுக்கும் பொருந்தும். அது சமூகத்தின் எந்தவொரு பிரிவையும் அல்லது எந்த நிறுவனத்தையும் ஒதுக்குவதில்லை. இக்கொள்கை செயல்படுத்தப்படும்போது (அச்செயல்கள், மிகவும் நேர்த்தியாக வடிவமைக்கப்பட்ட (i) ஒழுங்குபப்படுத்தல் ஆவணங்கள் மற்றும் தரங்கள், (ii) பொருளாதார ஆவணங்கள்,(iii) தகவல் அடிப்படையிலான ஆவணங்கள், (iv)சுயேச்சையான ஒப்பந்தங்கள் ஆகியன அடங்கிய ஒரு கலவையினால் ஆளப்படவேண்டும்), அரவணைப்புதன்மையை உறுதிப்படுத்த போதுமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். ஏனெனில், SCP இன் இறுதி குறிக்கோள் எதிர்கால சந்ததியினரின் உரிமைகளை விட்டுக்கொடுக்காது, விட்டுக்கொடுக்காத மானுட அபிவிருத்தி மற்றும் நலம் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதேயாகும்.

## 6. கொள்கை அமுலாக்கல்

## 6.1 ஆட்சி

சம்பந்தப்பட்ட பல்வேறு அமைச்சுகள் மற்றும் நிறுவனங்களின் தேவையான ஈடுபாட்டுடன் இவ் ஊடறுக்கும் தேசிய SCP கொள்கையை வெற்றிகரமாக அமுலாக்கவது அமைச்சுகளுக்குள்ளேயும் அமைச்சுகளுக்கிடையேயும் மற்றும் அவற்றின் பிரதான நிறுவனங்களுக்கிடையிலுமான ஒத்துழைப்பு, பொறுப்புகளை பகிர்ந்துகொள்ளல் மற்றும் வளங்களை சேமித்து வைத்தல் ஆகியவற்றில் தங்கியுள்ளது. அரசியல் பற்றுறுதியும் உண்மையான ஈடுபாடும் இக்கொள்கையின் வெற்றிகரமான அமுலாக்கத்திற்கு மிக முக்கியமாகும். அது எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகளை அடைவதற்காக துரிதமான தொடக்கத்தையும் பயன்மிக்க அமுலாக்கத்தையும் உறுதிப் படுத்துகிறது. இது இலக்குகள் செங்குத்தாகவும் கிடையாகவும் கீழநோக்கி வழிந்தோடல் பயனுக்கு சாதமாக அமையும் வண்ணம் நிர்வாக அதிகார பீடம் இவ்விலக்குகளை வினைத்திறன்மிக்க வகையில் அடைவதற்கு அதன்மீது சாதகமாக தாக்கம் செலுத்துகிறது.

எனவே, அமுலாக்கத்தை மேற்பார்வை செய்வதற்கும் ஒருங்கிணைப்பதற்கும் ஒரு ஆட்சிக் கட்டமைப்பும் பேண்தகு நுகர்வு மற்றும் உற்பத்தி தொடர்பான இத்தேசியக் கொள்கைக்கான கண்காணிப்பு கட்டமைப்பும் ஈடுபடுத்தப்படும்:

- அனைத்திலும் வியாபிக்கும் அரசியல் மேற்பார்வை பேண்தகு அபிவிருத்திக்கான தேசிய பேரவை மூலம் செய்யப்படும். இப்போரவைக்கு ஓர் ஒருங்கிணைந்த கொள்கையை வகுப்பது, பேண்தகு நுகர்வு மற்றும் உற்பத்தி (SDG12)அடங்கலாக சமூக பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்ஙகளின் பேண்தகு தன்மையை உறுதி செய்யுமுகமாக அனைத்து SDG களினதும் அமுலாக்கத்தை மேற்பார்வை செய்தல் மற்றம் வழிகாட்டல், அதன்மூலம் SDG12க்கும் வேறு SDG களுக்கும் இடைத்தொடர்புகளை ஏற்படுத்தல் ஆகிய பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளன. SDG12 இன் திட்டங்கள் மற்றும் முன்னேற்றம் தொடர்பாக சூழல் அறிக்கையிடலுக்குப் பொறுப்பான அமைச்சு அடங்கலாக முக்கிய பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்குப் பொறுப்பான சம்பந்தப்பட்ட சகல அமைச்சுகளும் இப்பேரவையில் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றன.

- சூழலுக்குப் பொறுப்பான அமைச்சு உண்மையான அமுலாக்கத்திற்கும், SDG12 மூலோபாயங்கள் மற்றும் நடவடிக்கைகள் ஆகயிவற்றைக் கண்காணித்தலுக்கும், NAMAகள் (தேசிய பொருத்தமான தணிப்பு நடவடிக்கைகள்) மற்றும் NDCகள் (தேசியரீதியாக நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புகள்) முதலிய காலநிலை மாற்ற விடயங்களில் கவனத்தைக் குவிக்கும் ஏற்கெனவே உள்ள கட்டமைப்புகளை ஒருங்கிணைபபுச் செயதலுககும் வழிகாட்டும். சூழல் என்ற விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அல்லது அவ்வமைச்சின் செயலாளரின் தலைமையில் சம்பந்தப்பட்ட அமைச்சுகள் மற்றும் *SCP* தொடர்பில் இனங்காணப்பட்ட துறைகளைச் சார்ந்த நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரதிநிகளைக்கொண்ட *SCP* தொடர்பான ஒரு தேசிய குழு தாபிக்கப்படும். அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களின் சம்பந்தப்பட்ட தலைவர்கள் இக்குழுவிற்கு மிகப் பொறுத்தமான ஆட்களை நியமிக்குமாறு ஊக்குவிக்கப்படுவர். அமுலாக்கத்திற்கு வழிகாட்டுவதற்கும், முக்கிய தொனிப்பொருள்களுக்கிடையில் இணைந்த சக்தியை பெற்றுக்கொள்வதற்கும் முரண்பாடுகளைத் தவிர்ப்பதற்கும், சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் செயலாற்றுகையை கண்காணிப்பதற்கும் செயற்பாடுகளின் முன்னேற்றங்களை மீளாய்வு செய்வதற்கும் இக்குழு மூன்று மாதங்களுக்கொரு முறை கூடவேண்டுமென எதிர்ப்பார்க்கப்படுகிறது. தேவையான உறுப்பினர்கள், நிர்வாக நடைமுறைகள் மற்றும் உறுதனை நடவடிக்கைகள் அடங்கலான இக்குழவின் செயலாற்று நியதிகள் இக்கொள்கை அங்கீகரிக்கப்பட்டவுடன் தயாரிக்கப்படும்.

- SCP குழுவிற்கு 2 பொறிமுறைகள் வாயிலாக உறுதுணையளிக்கப்படும்:

  1. சூழல் என்ற விடயத்திற்கு பொறுப்பான அமைச்சு தொடர்பாடல், அறிக்கையிடல், விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் திறனைக் கட்டியெழுப்புதல் உள்ளிட்ட குழுவின் செயற்பாடுகள் அனைத்தையும் கையாள்வதற்கு ஓர் உள்ளக அலகை நியமிக்கும். தேவையானபோதெல்லாம் ஆய்வுகளையும் கூட்டங்களையும் நடத்துவதற்குத் தேவையான ஆளணி மற்றும் நிதி ஆகியன ரீதியில் போதுமான வளங்களை அமைச்சு பெற்றுக் கொடுக்கும். செயலாளர் சார்பாக கூட்டங்களைக் கூட்டுதல் அடங்கலாக அனைத்து SCPநடவடிக்கைகளையும் ஒருங்கிணைப்பது SCPஅலகின் பொறுப்பாகும்.

  2. விசேட கருப்பொருள் உப செயற்குழுக்கள் மூலம் வேண்டுகோள் அடிப்படையில் தொழில்நுட்ப ரீதியக குழுவிற்கு உறுதுணை புரிவதற்கு சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் (தனியார் துறை, கலவியியல், ஆராய்ச்சி நிறுவகங்கள்

மற்றும் நுகர்வோர் அமைப்புகள்) ஆகியவற்றின் பிரதிநிதிகள் அடங்கிய SCP நிறுவனங்களுக்கிடையிலான வல்லுநர் செயற்குழு ஒன்று தாபிக்கப்படும். IAEWG வருடத்திற்கு இருமுறை – குழு கூடுவதற்கு முன்னர் - கூடும். கருப்பொருள் உப செயற்குழுக்களின் பட்டியலிடல் தேவையின் அடிப்படையில் செய்யப்படும். இச்செயற்குழுவிற்கான செயற்படு செலவுகள் ஆரம்பத்தில் சூழல் என்ற விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சினால் ஏற்கப்படும். எனினும், போதுமான உரித்தாண்மையைப் பெற்றுக்கொள்வதற்காக படிப்படியாக சம்பந்தப்பட்ட சகல பங்கீடுபாட்டாளர்களுக்குமிடையிலான அரச – தனியார் துறை பங்காண்மையினால் பகிர்ந்துகொள்ளப்படும்.

## 6.2 திட்டமிடல்

உள்ளக துறைகளுக்கிடையிலான பண்புகளும் நீண்ட கால தொலைநோக்கும் கொண்ட SCPவிற்கு ஓர் உறுதியான, இலக்கு அடிப்படையிலான திட்டமிடல் தேவை. அதன் மூலம் பேண்தகு அபிவிருத்தியை நோக்கிய நீண்டகால அணுகுமுமுறைகளுக்கு உறுதுணைபுரியவும், அரசாங்க மற்றும் தனியார் துறை செயற்பாட்டாளர்கள் தேவையானவற்றை இனங்காண்பதற்கும் சாதனைகளுக்கான நீண்டகால பாதைகளை தயார்படுத்தவும் இடமளிக்கவும் முடியும்.

நீண்டகால கண்ணோட்டம் திட்டமிடல் நடைமுறையை குறுகியகால அரசியல் மற்றும் வியாபார வற்புறுத்தல்களிலிருந்து பாதுகாக்க உதவுகிறது. பேண்தகு அபிவிருத்தி பெறுபேறுகளுக்குத் திட்டமிடுவதற்கு மிகக் கூடிய கொள்கை இயைபு, பிரதான நீரோட்டக் கொள்கையில் வழக்கத்தைவிட ஒருங்கிணைந்த திட்டமிடல் மற்றும் பிரதிபலிப்பு ஆட்சி மற்றும் நிகழ்ச்சித்திட்ட அமுலாக்கல் ஆகியன தேவைப்படும். ஒவ்வொரு குறிக்கோளும் மூலோபாயமும் புரிந்துகொள்ளப்பட்டு, அவற்றின் பொருளாதார, சமூக மற்றும் சூழல் தொடர்புகளோடு தொடர்புபடுத்தி மீளாய்வு செய்யபப்படவேண்டும். பின்வருவனவற்றை அடைவது முக்கியமாகும்:

- கொள்கை இயைபு: சமூக, பொருளாதார மற்றும் சூழல் காரணிகளை சமப்படுத்தல் மற்றும் ஏற்படக்கூடிய முரண்பாடுகளை முகாமைத்துவம் செய்தல் மற்றும் ஒரு இலக்கை எய்துவதில் எட்டப்படும் முன்னேற்றம் ஏனைய இலக்குகளின் பின்னடைவிற்கு வழிவகுக்காதிருப்பதை உறுதிப்படுத்துவதற்கான சமப்படுத்தல்கள்;
- பல்துறை திட்டமிடல்: அடையப்பெறுவதற்காக பல்வேறு துறைகளுக்கிடையே ஒருங்கிணைந்த நடவடிக்கையை வேண்டிநிற்கும் வறுமை மற்றும் காலநிலை மாற்றம் போன்ற SCPநிகழ்ச்சித்திட்டத்தில் உள்ள பல் அம்ச மற்றும் ஊடறுக்கும் பிரச்சினைகளை பல்துறை திட்டங்கள் தீரத்துவைக்கும்; அத்துடன்,
- பிரதிபலிப்பு மற்றும் பதிற் செயற்பாடாற்றல் கொள்கை வகுத்தல்: (i) விளைவுகளை தொடர்ச்சியாக அவதானித்தல், (ii) தொழில் செய்யும்போதே கற்றல் மற்றும் செவ்வையாக்கல், (iii) நவீன தொழில் நுட்பத்தின் அடிப்படையிலான புத்தாக்கம் மற்றும் (iv) மாற்றமுறும் சூழ்நிலைகளின் பின்னணியில் நீண்டகால அபிவிருத்தி குறிக்கோள்களுடனான குறுகியகால முன்னுரிமைகளின் சமப்படுத்தல்.

பிரிவு 4 இன் கீழ் விளக்கப்படும் அனைத்தையும் உள்ளடக்கும் கூற்றுக்களும் குறிக்கோள்களும் அபிவிருத்தி நிலைமைகளில் ஏற்படும் மாற்றங்களுக்கு பதிலிருக்கும்வகையில் ஆண்டுதோறும் இற்றைப்படுத்தப்படும் செயல் திட்டங்களில் விபரிக்கப்படும். முன்னேற்றங்கள் மற்றும் பெறுபேறுகளின் கிரமமான கண்காணித்தல் மற்றும் மீளாய்வு ஆகியவற்றின் அடிப்படையில் கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் தொடர்ச்சியான மீள்மதிப்பிடலும் நிலைமைக்கேற்ப மாற்றுதலும். இது உறுதியானதொரு கண்காணிப்பு மற்றும் மதிப்பிடல் வரைச்சட்டகத்தில் நிலைநிறுத்தப்படும்.

### 6.3 கண்காணித்தலும் மதிப்பிடலும்

தேசிய SCP கொள்கையின் பயன்மிக்க அமுலாக்கத்தை உறுதிப்படுத்துமுகமாக தற்போதுள்ள குறிகாட்டி தொகுதிகள் மற்றும் தயாரிக்கப்பட்ட SCP திசை இலக்குகள் ஆகியவற்றின்

அடிப்படையில் குறிகாட்டி வரைச்சட்டகமொன்றைக் கொண்ட விரிவான SCP கண்காணிப்பு முறைமையொன்று தாபிக்கப்படும். இது குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் (DCS)மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களம் (NPD)ஆகியவற்றினால் தலைமை தாங்கப்பட்டு வழிநடத்தப்படும். அபிவிருத்தி மற்றும் நாட்டில் மேற்கொள்ளப்படும் ஏனைய சமூகப் பொருளாதார நடவடிக்கைகளின் திட்டமிடல், அமுலாக்கல் மற்றும் முன்னேற்றத்தை கண்காணித்தல் ஆகியவற்றுக்குத் தேவையான உரிய, நம்பகமான மற்றும் இற்றைவரையான தகவல்களை DCS திரட்டும்; தொகுக்கும்; பரப்பும். எனவே, அனைத்து தேசிய குடிசன மதிப்பீடுகளையும் ஆய்வுகளையும் மேற்கொள்தல் மற்றும் நிர்வாகப் பதிவுகளைப் பயன்டுத்தி முன்னுரிமைகள் மற்றும் இலக்குககள் ஆகிவற்றிலான முன்னேற்றத்தைப் பின்தொடர்ந்து கவனிப்பதன்மூலம், சுட்டி அடிப்படையிலான கண்காணிப்பும் அறிக்கையிடலும் SCPமுன்னேற்றத்தின் வெற்றியை மதிப்பிடுவதன் மிகவும் பயன்மிக்க வடிவங்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. SCPஇன் சுட்டிகள் சூழல் மற்றும் வறுமை குறைப்பு அடங்கலான பேண்தகு அபிவிருத்தி ஆயனமீதான விரிவான சுட்டிகள் தொகுதியோடு பிரிக்கமுடியாதவாறு இணைக்கப்பட்டுள்ளது. சுட்டிகள் மேலும் கூடிய பேண்தகு நுகர்வு மற்றும் உற்பத்தி முறைகளைநோக்கிய முன்னேற்றத்தை மதிப்பிடும் சுட்டிகளை விருத்தி செய்வது தொடர்பாக பல்வேறு அமைச்சுகளுக்கு வழிகாட்டுதல் வழங்கும். SCPநிகழ்ச்சித் திட்டமொன்றை கண்காணிப்பது ஒரு தொடர்ந்து நடைபெறும் நடைமுறையாகும் என்பதோடு, மேலும் சிறந்த முறைமைகளும் தரவுகளும் கிடைக்கும்போது இன்னும் வளர்ச்சியுறும்.

## 7.சொற்களஞ்சியம்

இக்கொள்கை எந்த அர்த்ததில் விருத்தி செய்யப்பட்டதோ, அவ்வர்த்தங்களிலான சில சொற்பிரயோகங்கள் பற்றிய ஒரு சிறந்த புரிந்துணர்வை இக்கொள்கை ஆவணத்தை பயன்படுத்துவோர் பெற்றுக்கொள்வதற்கு உதவுவதே இச் சொற்களஞ்சியத்தின் நோக்கமாகும். வெவ்வேறு சூழ்நிலைகளிலும் சந்தர்ப்பங்களிலும் அத்தகைய சொற்களின் விளக்கம் வெவ்வேறுபட்டதாக இருக்கக்கூடும் என்பதை குறிப்பிடுவது முக்கியமாகும்.

**பகுதி அ:**

**கொள்கை இலக்குகள்:** அடிஆதாரமாக உள்ள கொள்கைக் கோட்பாடுகளிலிருந்து தொடரும் ஒரு கொள்கைக்கு "இலக்குகள்" உண்டு, இவ்விலக்குகள் எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகளின் அல்லது கொள்கையை அமுல்படுத்துவதன்மூலம் அடையவேண்டியவற்றின் அளவுகளை விளக்கும். ஒரு கொள்கை இலக்கு என்பது, செயற்பாட்டிற்கான வழிகாட்டலை வழங்கும் எண்ணம் பற்றிய ஒரு விரிவான அறிக்கையாகும்.

**கொள்கைக் குறிக்கோள்கள்:** இலக்குகளும் குறிக்கோள்களும் ஒன்றல்ல. "அளவிடக்கூடிய தன்மை" குறிக்கோள்களை நிர்ணயிப்பதில் ஒரு முக்கியமான கோட்பாடாகக் கருதப்படுகிறது. குறிக்கோள்கள் வழக்கமாக ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட "இயக்க அலகுகளோடு" தொடர்புபடுத்தப்படுவதோடு, "குறுகியகால"தன்மைகொண்டவை. அளவிடக்கூடிய குறிக்கோள்கள் இல்லாத ஒரு கொள்கையை எழுதுவது முற்றிலும் சாத்தியமானது என்பதோடு, அது நாட்டின் தேவைகளுக்கு உதவும். இலக்குகள் கொள்கை நீட்சியை உறுதிப்படுத்துவதற்குப் போதுமானதாகும். கொள்கை குறிக்ககோள்கள் என்பது, கொள்கையை பின்பற்றி நடப்பதற்கு அவர்கள் என்ன செய்யவேண்டும் என்பதை வாசகர்கள் புரிந்துகொள்வதற்கு உதவும் கொள்கைக்குள் அடங்கியிருக்கும் எழுதப்பட்ட வழிகாட்டல்கள் ஆகும். எழுதப்பட்ட இந்த வழிகாட்டி சிறந்த, கருத்துமயக்கமற்ற மற்றும் தெளிவான சொற்களினால் எழுதப்படவேண்டும்.

**கொள்கை கோட்பாடுகள்:** ஒரு கொள்கை ஏன் இருக்க வேண்டும் என்பதற்கான காரணங்களே கொள்கை கோட்பாடுகளாகும். ஒரு நோக்கததிற்காகவே ஒரு கொளகை இருக்கிறது. இது அதற்கு அடிஆதாரமாக உள்ள கோட்பாடுகளின் வடிவத்தில் வெளிப்படுத்தப்படுகிறது. அரசாங்கம் ஏன் கொள்கையை வெளியிடுகிறது, அதன் எதிர்ப்பார்க்கப்பட்ட பயன் அல்லது பெறுபேறு என்னவாக இருக்கவேண்டும் என்பதையெல்லாம் விளக்கும். கொள்கை கோட்பாடுகள் நிறுவன அல்லது மூலோபாய திட்டங்களில் உள்ள தொலைநோக்கு கூற்றுகளுக்கு ஒப்பானவையாகும்.

**கொள்கை கூற்றுக்கள்:** கொள்கை கூற்றுகள்தான் அரசாங்கத்தின் நிலைப்பாடு தொடர்பான முக்கிய கூற்றாகும். கொள்கை அறிக்கைகள் வாயிலாக கொள்கையின் நோக்கம் எளிய இரத்தினச் சுருக்கமான அறிக்கைகள் வடிவத்தில் கூறப்படும். எனவே, ஒரு குறிப்பிட்ட விடயத்தில் அல்லது

விடயங்களில் நேர்மையான அறிக்கை அல்லது பிரவகடணத்தை வெளியிடுவதற்கு கொள்கை கூற்றுகள் பயன்படுத்தப்படும். கொள்கை கூற்றுகள் தொடர்ச்சியான திருத்தங்களுக்கு உட்படுத்தாமல் நீண்டகாலம் நீடிக்கும் தன்மை கொண்டவை. அதேவேளை, எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய எதிர்பாராத சூழ்நிலைகளுக்கு நெகிழ்வானதாக இருப்பதற்கும் இடமளிப்பதற்கும் போதுமான அளவு பொதுத் தன்மையானதாகவும் உள்ளன. பொதுவில், கொள்கை கூற்றுகள் எடுக்கப்படும் நடவடிக்கைகளை ஆள்கின்றன; அவற்றிற்கு வழிகாட்டுகின்றன. கொள்கை கூற்றுகள் ˙ என்ன செய்யப்படவேண்டும் என்பதை கூறுமேயன்றி, அது எவ்வாறு செய்யப்படும் என்பதையல்ல. கொள்கை கோட்பாடுகளுக்கும் கொள்கை கூற்றுகளுக்குமிடையே தெளிவன வேறுபாடு உண்டு. கொள்கை கோட்பாடுகள் விஞ்ஞானபூர்வமான வலுவான சான்று அல்லது தரவு இல்லாவிடினும், செயலின் அல்லது சிந்தனையின் “அடிப்படை அல்லது நம்பிக்கைகள்” ஆகும். இந்தக் கொள்கை கோட்பாடுகளில் “நம்பிக்கை” வைத்து கொள்கை வகுப்பவர்கள் தாம் பின்பற்ற உறுதிபூண்டவற்றைக் “கூறுவர்”. எனவே, கொள்கை கூற்றுகள் ˙ “நாம் இதுதான் செய்ய விரும்புகிறோம் என்பதை மக்களுக்கு கூறும் தெளிவான செய்திகள்” ஆகின்றன.

**பகுதி ஆ**

**தூய்மையான உற்பத்தி:** ஒட்டுமொத்த வினைத்திறனை அதிகரிப்பதற்கும் மனிதர்கள் மற்றும் சூழலுக்கான இடர்களை குறைப்பதற்கும் பொருட்கள் மற்றும் சேவைகளை செயன்முறைக்கு உட்படுத்துவதற்கான ஓர் ஒன்றிணைந்த தடுப்பு சூழல் மூலோபாயத்தின் தொடர்ச்சியான பிரயோகம். தூய்மையான உற்பத்தி ஏதேனும் கைத்தொழிலில் பயன்படுத்தப்படும் நடைமுறைகள், பொருட்கள் மற்றும் சமூகத்தில் வழங்கப்படும் பல்வேறு சேவைகள் ஆகிவற்றுக்குப் பிரயோகிக்கப்பட முடியும்.

**தொடர்பறுத்தல்:** தொடர்பறுத்ததல் (1) மொத்த உள்நாட்டு உற்பத்தி அல்லது மானுட அபிவிருத்தி சுட்டி முதலிய பொருளாதா மாறிகள் மற்றும் (2) வளப் பாவனை மற்றும் சூழல் சுட்டிகள் முதலிய சூழல் மாறிகள் ஆகியவற்றிற்கிடையிலான தொடர்பினைக் குறிக்கும். பொருளாதார வளர்ச்சியை வளப் பாவனையிலிருந்து தொடர்பறுத்தலுக்கும் சூழல் தாக்கங்களிலிருந்து தொடர்பறுத்தலுக்குமிடையே ஒரு வேறுபாடு உண்டு. வள தொடர்பறுத்தல் பொருளாதார செயற்பாட்டின் அலகொன்றிற்கான வளப் பாவனை வீதத்தை குறைப்பது என்று பொருள்படும். இந்த “பொருள்மயமில்லாதாக்கல்” அதே பொரளாதார வெளியீட்டிற்கு குறைந்தளவு பொருட்கள், வலு, நீர் மற்றும் நில வளங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தலை அடிப்படையாகக் கொண்டது. வள உள்ளீட்டடிற்கு ஏற்ப பொருளாதார வெளியீடு(GDP) அதிகரிக்கும்போது சுட்டிக்காட்டப்படும் எந்த வினைத்திறனுடன் வளங்கள் பயன்படுத்தப்படுகின்றனவோ, அந்த வினைத்திறனின் அதிகரிப்பிற்கு வளங்களை தொடர்பறுத்தல் இட்டுச்செல்லும்.

**சூழல் வினைத்திறன்:**குறைந்த பட்சம் பூமியின் மதிப்பிடப்பட்ட தாங்கும் கொள்ளளவிற்கேற்ற ஒருமட்டத்திற்கு வாழ்க்கை வட்டம் முழுவதும் சூழல் தாக்கங்கள் மற்றும் வள அடர்த்தி ஆகியவற்றைக் குறைக்கும் அதேளை, மனிதத் தேவையை பூர்த்தி செய்வதும் வாழ்க்கைத் தரத்தைக் கொண்டுவருவதுமான போட்டித்தன்மையோடு விலையிடப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளின் வழங்கல் மூலம் சூழல் வினைத்திறன் அடையப்பெறும்.

**வாழ்க்கை வட்ட மதிப்பீடு(LCA)**:வாழ்க்கை வட்ட மதிப்பீடு(LCA) என்பது, உற்பத்தி அல்லது சேவையின் வாழ்க்கை வட்டத்தில் அவற்றின் சூழல் மற்றும் சமூக செயலாற்றுகையை மதிப்பிடுவதற்கான ஒரு கருவியாகும். சூழல் வாழ்க்கை வட்ட மதிப்பீட்டின் (ELCA) கீழ், வளங்களை தோண்டியெடுத்தலும் நுகர்வும் (வலு அடங்கலாக) அத்துடன் காற்று, நீர், மண் ஆகியவற்றில் வெளியிடப்படுபவை வாழ்க்கை வட்டத்தின் எல்லாக் கட்டங்களிலும் தொகை வடிவில் காட்டப்படும். முக்கிய சூழல் தாக்கப் பிரிவுகளுக்கான அவற்றின் பங்களிப்பு அதன்பின்னர் மதிப்பிடப்படும். இவற்றுள், காலநிலை மாற்றம், நச்சுத் தன்மை, சூழல் முறைமை சேதம் மற்றும் வள அடித்தளம் மோசமடைதல் ஆகியன அடங்கும்.

**வாழ்க்கை வட்டச் சிந்தனை:**வாழ்க்கைச் வட்டச் சிந்தனை உற்பத்தித் தளம் மற்றும் தயாரிப்பு நடைமுறை ஆகியனவற்றின்மீதான பாரம்பரியக் கவனக் குவிப்பை விரிவுபடுத்துவதோடு, கட்டத்திற்குக் கட்டமான ( உ.ம்: வளங்களை தோண்டியயெடுப்பது முதல் தயாரிப்பு ஊடாக வெளியடப்படும் உற்பத்தியின் இறுதி செயன்முறைக்குட்படத்தல்வரை) உற்பத்தியின் முழு வாழ்க்சைகச் சுழற்சியினதும் பல்வேறு அம்சங்களையும் கூட்டிணைக்கும்.

**மாசுபடுத்துபவர் கிரயத்தைச் செலுத்துவார்(PPP)::** மாசுபடுத்துபவர் கிரயத்தைச் செலுத்துவார் (PPP)என்பது, மாசுறுதலை ஏற்படுத்துபவர் அதற்கான செலவை ஏற்கவேண்டும் என்று தேவைப்படுத்தும் ஒரு சூழல் கொள்கையாகும். அதன் ஆரம்ப வடிவவில் "மாசுபடுத்துபவர் கிரயத்தைச் செலுத்துவார்" கொள்கை மாசடைதல் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு ஆகியவற்றின் செலவு எவ்வாறு ஒதுக்கீடு செய்யப்படவேண்டும் என்பதைத் தீர்மானிப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தது: மாசுபடுத்துபவர் செலுத்தவேண்டியது. அதன் உடனடி முக்கிய இலக்கு பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் உற்பத்திச் செலவை முழுமையாக பிரதிபலிக்கும் வண்ணம் பொருளாதார செயற்பாடுகளின் சூழல்சார் விளைவுகளை உணர்ந்துகொள்வதாகும். இன்று இக் கோட்பாடு சர்தேச சூழல் சட்டத்தின் ஒரு பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கோட்பாடாகும்.

**பேண்தகு நுகர்வும் உற்பத்தியும்:** பேண்தகு நுகர்வும் உற்பத்தியும்(SCP) என்பது, "எதிர்கால சந்ததியினரின் தேவைகளை நாசப்படுத்தாத வண்ணம் சேவை அல்லது உற்பத்திப் பொருளின் வாழ்க்கைச் சுழற்சியில் இயற்கை வளங்கள், நச்சுப் பதார்த்தங்கள் ஆகியவற்றின் பாவனையையும் கழிவுகள் மற்றும் மாசுகள் ஆகயிவற்றின் வெளியிடலையும் ஆகக் குறைந்தளவிற்குக் குறைக்கும் அதேவேளை, அடிப்படைத் தேவைகளுக்கு பதிலளிப்பதும் மேலும் சிறந்த வாழ்க்கைத் தரத்தை கொண்டுவருவதுமான சேவைகள் மற்றும் தொடர்புடைய உற்பத்திப் பொருட்கள் ஆகியவற்றின் பாவனையாகும்".

**பேண்தகு பெறுகை:** பேண்தகு பெறுகை என்பது, சூழலுக்கான சேதத்தை ஆகக்குறைந்த அளவிற்குக் குறைக்கும் அதேவேளை, நிறுவனத்திற்கு மட்டுமின்றி, சமூகத்திற்கும் நாட்டிற்கும் நன்மை பயத்தல் என்ற வகையில் நிறுவனம் தனது பொருட்கள், சேவைகள், வேலைகள் மற்றும் பயன்பாடு ஆகியவற்றிற்கான தேவைகளை அவற்றுக்காக செலுத்தும் பணத்திற்கான பெறுமதியை அடையும் வகையில் பூர்த்தி செய்யும் ஒரு நடைமுறையாகும். பேண்தகு பெறுகை பொருளாதார, சமூக மற்றும் சூழல் ஆகிய பேண்தகு அபிவிருத்தியின் மூன்று தூன்களுக்கிடையே பொருத்தமான சமநிலையை அடைவதற்கு முயல்கிறது. பொருளாதாரக் காரணிகளுள் கொள்வனவு, பராமரிப்பு, நடத்துதல் மற்றும் வாழ்விறுதி முகாமைத்துவச் செலவுகள் (கழிவற்றுதல் அடங்கலாக) முதலிய முழு வாழ்க்கை சுழற்சியிலும் சிறந்த நிதி முகாமைத்துவத்திற்கேற்ப பொருட்கள் மற்றும் சேவைகளின் செலவு அடங்கும். சமூகக் காரணிகளுள் சமூக நீதியும் சமத்துவமும்; பாதுகாப்பும் பத்திரமும்; மனித உரிமைகளும் தொழில் நிபந்தனைகளும் அடங்கும். சூழல் காரணிகளுள், முழு உற்பத்தி வாழ்க்கை சுழற்சியிலும் காற்று, நிலம் மற்றும் நீர் ஆகியவற்றில் வெறியேற்றல், காலநிலை மாற்றம். உயிர் பன்மைத்துவம், இயற்கை வளங்களின் பயன்பாடு மற்றும் நீர் தட்டுப்பாடு ஆகியன அடங்கும்.

.

---

**பின்னிணைப்பு 1:SCPஇன் ஊடறுக்கும் தன்மையோடு சேர்த்து எல்லாSDG கள் பற்றிய ஒரு மேலோட்டம்**

2014 இல், ஒரு தொகுதி பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் வரைவிலக்கணப்படுத்தப்பட்டன. இவ் SDG 2015 – 2030 காலப் பகுதிக்கான சர்வதேச சமூகத்திற்கான உசாத்துணை இலக்குகளாக மில்லேனியம் அபிவிருத்தி இலக்குகளை (MDGs) பிரதியீடு செய்கின்றன. இப்புதிய இலக்குகள் தொகுதியை விருத்தி செய்தல் ஓர் இலட்சியவேட்கைமிகு சவாலாகப் பரவலாகப் பார்க்கப்பட்டது. ஏனெனில், இவ்விலக்குகள் முந்திய இலக்குகளைவிட மிகப் பரந்தளவான விடயங்களை உள்ளடக்குின்னறன. சர்வதேச அளவினதாக இருக்க இலக்கு கொண்டுள்ளது – அதாவது, அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு மட்டுமின்றி, எல்லா நாடுகளுக்கும் பொருந்துவதாக இருக்கும் இலக்கு கொண்டுள்ளது. எனவே, 1992 புவி உச்சி மாநாட்டிலிருந்து சர்வதேச சமூகத்திற்கு எட்டாக் கனியாகவிருந்த பேண்தகு அபிவிருத்திக்கான சிரமமான ஒரு மாற்றத்திற்கான வழிகாட்டி சகிம்சையாக அது இருக்கவேண்டியுள்ளது.

SDG தெகுதியில் பல இலக்குகள் மற்றும் துறைகளைக் குறிப்பிடும் இலக்குகள் இருப்பது, துறைகளுக்கிடையே, அதிலும் குறிப்பாக சர்வதேச அபிவிருத்தி நிறவனங்களிடையே ஒருங்கிணைப்பிற்கும் கொள்கை இசைவிற்கும் வசதியேற்படுத்தலாம். இலக்குகள் மத்தியிலான அத்தகைய தொடர்புகள், பேண்தகு நுகர்வு மற்றும் உற்பத்தி முதலிய அபிவிருத்தி நிறுவனங்களில் பலமான துறைசார் உறுதிபடுத்தல் இல்லாமையால் முன்னர் பாதிப்படைந்த அம்சங்களின் உண்மையான ஒழுங்குமுறைப்படுத்தலுக்கு வசதியேற்படுத்தலாம்.

கீழே காணப்படும் அட்டவணை SCPக்கும் இலக்குகளுக்கும் - SDG12 இன் கீழ் விளக்கமாக விபரிக்கப்பட்டுள்ளது - ஏனைய இலக்குகளுக்குமிடையிலான தொடர்புகளை எடுத்துக் காட்டுகிறது. உதாரணமாக, நீர் தொடர்பான SCP க்கும் SDG 6 க்கும் இடையிலான தொடர்பு நீர் இலக்கின் கீழான இரண்டு பணி இலக்குகளினால் வழங்கப்படுகிறது: பணி இலக்கு 6.3,“2030 க்கு முன்னர் மாசுறுதலை குறைத்தும், குப்பை கொட்டுவதை இல்லாதொழித்தும், அபாயகரமான இரசாயனங்கள் மற்றும் பொருட்கள் வெளியிடப்படுவதை ஆகக் குறைந்த அளவிற்கு குறைத்தும், சுத்திகரிக்கப்படாத கழிவு நீரின் அளவை அரைவாசியாகக் குறைத்தும் மற்றும் உலகளாவிய *x%* இனால் மீள்சுழற்சியையும் பாதுகாப்பான மீள் பாவனையையும் அதிகரித்தும் நீரின் தரத்தை அதிகரிக்கும். பணி இலக்கு 6.4,“2030 க்கு முன்னர் எல்லாத் துறைகளிலும் நீர்ப் பாவனை வினைத் திறனைக் கணிசமாக அதிகரித்து, நீர் தட்டுப்பாட்டை தீர்ப்பதற்கு தூய நீரின் பேண்தகு மீட்பையும் வழங்கலையும் உறுதிப்படுத்துவதோடு, நீர் தட்டுப்பாட்டினால் அவதியுறும் மக்களின் எண்ணிக்கையை கணிசமானளவு குறைக்கும்”. SCPயானது, பணிஇலக்கு 8.4,“நுகர்விலும் உற்பத்தியிலுமான 2030 உலகளாவிய வள வினைத்திறன் வாயிலாக பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதோடு, வளர்ச்சியடைந்த நாடுகள் முன்னணி வகிக்க, பேண்தகு நுகர்வு மற்றும் உற்பத்தி தொடர்பான 10 வருட நிகழ்ச்சித் திட்ட வரைச்சட்டகத்திற்கமைய அப்பொருளாதார வளர்ச்சியை சூழல் சிரழிவிலிருந்து தொடர்பறுப்பதற்கும் முயல்கிறது”. SCP யோடு தொடர்புபட்ட கரிசனைகள் வேறு இலக்குகளுக்குரிய பணிஇலக்குகளில் உள்ளடக்கப்படும் என்பது இதன் பொருளாகும்.

.

| | Goal | Subgoals | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | Poverty | 1.1 | 1.2 | 1.3 | 1.4 | 1.5 | 1.a | 1.b | | | | | | | | | | | | |
| 2 | Food | 2.1 | 2.2 | 2.3 | 2.4 | 2.5 | 2.a | 2.b | 2.c | | | | | | | | | | | |
| 3 | Health | 3.1 | 3.2 | 3.3 | 3.4 | 3.5 | 3.6 | 3.7 | 3.8 | 3.9 | 3.a | 3.b | 3.c | 3.d | | | | | | |
| 4 | Education | 4.1 | 4.2 | 4.3 | 4.4. | 4.5 | 4.6 | 4.7 | 4.a | 4.b | 4.c | | | | | | | | | |
| 5 | Gender | 5.1 | 5.2 | 5.3 | 5.4 | 5.5 | 5.6 | 5.a | 5.b | 5.c | | | | | | | | | | |
| 6 | Water | 6.1 | 6.2 | 6.3 | 6.4 | 6.5 | 6.6 | 6.a | 6.b | | | | | | | | | | | |
| 7 | Energy | 7.1 | 7.2 | 7.3 | 7.a | 7.b | | | | | | | | | | | | | | |
| 8 | Economy | 8.1 | 8.2 | 8.3 | 8.4 | 8.5 | 8.6 | 8.7 | 8.8 | 8.9 | 8.1 | 8.a | 8.b | 8.c | | | | | | |
| 9 | Industry | 9.1 | 9.2 | 9.3 | 9.4 | 9.5 | 9.a | 9.b | 9.c | | | | | | | | | | | |
| 10 | Inequality | 10.1 | 10.2 | 10.3 | 10.4 | 10.5 | 10.6 | 10.7 | 10.a | 10.b | 10.c | | | | | | | | | |
| 11 | Cities | 11.1 | 11.2 | 11.3 | 11.4 | 11.5 | 11.6 | 11.7 | 11.a | 11.b | 11.c | | | | | | | | | |
| 12 | SCP | 12.1 | 12.2 | 12.3 | 12.4 | 12.5 | 12.6 | 12.7 | 12.8 | 12.a | 12.b | 12.c | | | | | | | | |
| 13 | Climate Change | 13.1 | 13.2 | 13.3 | 13.a | 13.b | | | | | | | | | | | | | | |
| 14 | Marine | 14.1 | 14.2 | 14.3 | 14.4 | 14.5 | 14.6 | 14.7 | 14.a | 14.b | 14.c | | | | | | | | | |
| 15 | Ecosystem | 15.1 | 15.2 | 15.3 | 15.4 | 15.5 | 15.6 | 15.7 | 15.8 | 15.9 | 15.a | 15.b | | | | | | | | |
| 16 | Inclusive | 16.1 | 16.2 | 16.3 | 16.4 | 16.5 | 16.6 | 16.7 | 16.8 | 16.9 | 16.1 | 16.a | | | | | | | | |
| 17 | Global | 17.1 | 17.2 | 17.3 | 17.4 | 17.5 | 17.6 | 17.7 | 17.8 | 17.9 | 17.10 | 17.11 | 17.12 | 17.13 | 17.14 | 17.15 | 17.16 | 17.17 | 17.18 | 17.19 |

| | இலக்கு | உப இலக்குகள் | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | வறுமை | 1.1 | 1.2 | 1.3 | 1.4 | 1.5 | 1.a | 1.b | | | | | | | | | | | | |
| 2 | உணவு | 2.1 | 2.2 | 2.3 | 2.4 | 2.5 | 2a | 2b | 2c | | | | | | | | | | | |
| 3 | சுகாதாரம் | 3.1 | 3.2 | 3.3 | 3.4 | 3.5 | 3.6 | 3.7 | 3.8 | 3.9 | 3a | 3b | 3c | 3d | | | | | | |
| 4 | கல்வி | 4.1 | 4.2 | 4.3 | 4.4 | 4.5 | 4.6 | 4.7 | 4.a | 4.b | 4c | | | | | | | | | |
| 5 | பால் | 5.1 | 5.2 | 5.3 | 5.4 | 5.5 | 5.6 | 5a | 5b | 5c | | | | | | | | | | |
| 6 | நீர் | 6.1 | 6.2 | 6.3 | 6.4 | 6.5 | 6.6 | 6a | 6b | | | | | | | | | | | |
| 7 | வலு | 7.1 | 7.2 | 7.3 | 7a | 7.b | | | | | | | | | | | | | | |
| 8 | பொருளாதாரம் | 8.1 | 8.2 | 8.3 | 8.4 | 8.5 | 8.6 | 8.7 | 8.8 | 8.9 | 8.10 | 8a | 8b | 8c | | | | | | |
| 9 | கைத்தொழில் | 9.1 | 9.2 | 9.3 | 9.4 | 9.5 | 9a | 9b | 9c | | | | | | | | | | | |
| 10 | ஏற்றத்தாழ்வு | 10.1 | 10.2 | 10.3 | 10.4 | 10.5 | 10.6 | 10.7 | 10a | 10b | 10c | | | | | | | | | |
| 11 | நகரங்கள் | 11.1 | 11.2 | 11.3 | 11.4 | 11.5 | 11.6 | 11.7 | 11a | 11b | 11c | | | | | | | | | |
| 12 | SCP | 12.1 | 12.2 | 12.3 | 12.4 | 12.5 | 12.6 | 12.7 | 12.8 | 12a | 12b | 12c | | | | | | | | |
| 13 | காலநிலை மாற்றம் | 13.1 | 13.2 | 13.3 | 13a | 13b | | | | | | | | | | | | | | |
| 14 | கடல் | 14.1 | 14.2 | 14.3 | 14.4 | 14.5 | 14.6 | 14.7 | 14a | 14b | 14c | | | | | | | | | |
| 15 | சூழல் முறை | 15.1 | 15.2 | 15.3 | 15.4 | 15.5 | 15.6 | 15.7 | 15.8 | 15.9 | 15a | 15b | | | | | | | | |
| 16 | உட்படுத்தல் | 16.1 | 16.2 | 16.3 | 16.4 | 16.5 | 16.6 | 16.7 | 16.8 | 16.9 | 10.10 | 16a | | | | | | | | |
| 17 | உலகளாவிய | 17.1 | 17.2 | 17.3 | 17.4 | 17.5 | 17.6 | 17.7 | 17.8 | 17.9 | 17.10 | 17.11 | 17.12 | 17.13 | 17.14 | 17.15 | 17.16 | 17.17 | 17.18 | 17.19 |

**பின்னிணைப்பு 2: தொடர்புடைய கொள்கைகளின் நிரல்**

1. தூய காற்று 2000 மூலோபாய மற்றும் செயற்றிட்டம் (1992)
2. தேசிய குடிநீர்க் கொள்கை
3. இலங்கையில் நீர்நிலைகள், அவற்றின் நீரேந்து பகுதிகள் மற்றும், ஒதுக்கிய பகுதிகள் ஆகியவற்றைப் பாதுகாத்தல் தொடர்பான தேசியக் கொள்கை (2014)
4. தேசிய நீர் வளங்கள் கொள்கையும் நிறுவன ஏற்பாடுகளும். (2000)
5. கிராமிய நீர் வழங்கல் மற்றும் துப்பரவேற்பாட்டுத் துறைக்கான தேசியக் கொள்கை
6. தேசிய மழைநீர் பயன்பாட்டுக் கொள்கை (2005)
7. இலங்கை தேசிய ஊட்டச் சத்துக் கொள்கை (2010)
8. தேசிய விவசாயக் கொள்கை
9. விவசாயத் துறைக்கான தூய்மையான உற்பத்தி தொடர்பான தேசியக் கொள்கை மற்றும் மூலோபாயம்.
10. தேசிய உயிர்ப்பன்மைத்துவப் பாதுகாப்புக் கொள்கை (2005)
11. தேசிய உயிர்த் தொழில்நுட்பக் கொள்கைக்கான தேசிய கொள்கை வரைச்சட்டகம்.
12. தேசிய கடற்றொழில் மற்றும் நீரக வளங்கள் கொள்கை (2006)
13. கடற்றொழில் துறை அபிவிருத்திக்கான இடைக்காலக் கொள்கை வரைச்சட்டகம். (2012)
14. கடற்றொழில் துறைக்கான தூய உற்பத்த்தி தொடர்பான தேசியக் கொள்கை மற்றும் மூலோபாயம்.
15. தேசிய சுகாதார மேம்பாட்டுக் கொள்கை (நகல்)
16. இலங்கை சுகாதாரத் தகவல் தொடர்பான தேசியக் கொள்கை (நகல்)
17. சுகாதார துறைக்கான தூய உற்பத்த்தி தொடர்பான தேசியக் கொள்கை மற்றும் மூலோபாயம்.(2007)
18. தேசிய வீடமைப்புக் கொள்கை (நகல்)
19. தேசிய கல்விக் கொள்கை ஆலோசனைகள்
20. இலங்கைக்கான தேசிய சக்திக் கொள்கை மற்றும் மூலோபாயம் (நகல்)
21. இலங்கை தேசிய சக்திக் கொள்கை மற்றும் மூலோபாயம (2008)
22. தேசிய காணிப் பயன்பாட்டுக் கொள்கை
23. தேசிய National watershed முகாமைத்துவக் கொள்கை management policy
24. ஈரநிலம் தொடர்பான தேசியக் கொள்கை.
25. தேசிய வனக் கொள்கை
26. இலங்கை தேசிய ஊடுறுவும் பிற உயிரினக் (IAS) கொள்கை
27. வனவிலங்குகள் தொடர்பான தேசியக் கொள்கை
28. இலங்கையில போக்குவரத்து தொடர்பான தேசியக் கொள்கை
29. தேசிய பௌதிக திட்டமிடல் கொள்கை மற்றும் திட்டம்
30. தேசிய பௌதிக திட்டமிடல் கொள்கை மற்றும் திட்டம்– 2030
31. தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பக் கொள்கை
32. அரசாங்கத்தில் ததொதொ (ICT)பயன்பாட்டுக்கான கொள்கையும் நடைமுறைகளும் (E- அரசாங்கக் கொள்கை)
33. இலங்கை தேசிய இளைஞர் கொள்கை
34. சிறு மற்றும் நடுத்தர தொழில்முயற்சிக் கொள்கை (நகல்)
35. கன்னியமான தொழிலுக்கான தேசிய கொள்கை வரைச்சட்டகம்.
36. உயர் மாசுபடுத்தல் கைத்தொழில்களின் அமைவிடங்களைக் காணல்
37. தேசிய தொழில்தள பாதுகாப்பு மற்றும் சுகாதாரக் கொள்கை (2014)
38. திண்மக் கழிவு முகாமைத்துவத்துக்கான தேசிய மூலோபாயம்.
39. தேசிய பெருந்தோட்டக் கைத்தொழில் கொள்கை வரைச்சட்டகம்.
40. சுற்றுலாத் துறைக்கான தூய உற்பத்த்தி தொடர்பான தேசியக் கொள்கை மற்றும் மூலோபாயம்
41. ஊடகக் கொள்கை
42. தேசிய சிவில் விமானப் போக்குவரத்துக் கொள்கை (2009)
43. அனர்த்த முகாமைத்துவத்துக்கான தேசியக் கொள்கை (2013)
44. இலங்கை தேசிய காலநிலை மாற்றக் கொள்கை (2012)
45. இலங்கைக்கான தேசிய காலநிலை மாற்றத்துக்கு இசைவாதல் மூலோபாயம்
46. நிர்மாணத்துக்கான வளமென்ற வகையில் மணல் தொடர்பான தேசியக் கொள்கை மீளாய்வு

**பின்னிணைப்பு 3:ஒவ்வொரு முக்கிய கருப்பொருளுக்குமான கோட்பாடுகள், கூற்றுகள் மற்றும் இலக்குகள்**

## 1 காற்று[1]

**1.1.1 கொள்கைக் கோட்பாடு**

ஆரோக்கியமான தேசத்திற்கான தூய காற்று

### 1.1.2 கொள்கை கூற்றுகள்

1. சகல பொருளாதார நடவடிக்கைகளுக்கும் (புகை) வெளியிடலைக் குறைத்தல் மற்றும் மாசுறுதலை கட்டுப்பபடுத்தல் ஆகியவற்றை அறிமுகப்படுத்தல், உ.ம்: கட்டுமானம் மற்றும் நிர்மாணம், போக்கு வரத்து, கைத்தொழில், வலு உற்பத்தி, காணிப் பாவனை, விவசாயம், கால்நடை, கழிவுகள் மற்றும் வீட்டுப் பொருட்கள் (வீட்டினுள் காற்று மாசுறுதல்).
2. ஓர் இதமான காற்றுத் தரத்தை மேற்பார்வை செய்வதற்கான முறைமையொன்றை அறிமுகப்படுத்தல்
3. காற்றுமாசுறுதலின் சூழல் தாக்கங்கள் தொடர்பாக பொது விழிப்புணர்வை ஏற்படுத்தல் (சுகாதாரம் தொடர்புடயவை அடங்கலாக) தடுப்பிற்கான மிகச் சிறந்த நடைமுறைகளையும் (குறிப்பிட்ட பொருட்களின் பாவனையைத் தவிர்த்தல், நுகர்வு நடத்தையை மாற்றுதல்).

### 1.1.3 கொள்கை இலக்குகள்

1. சம்பந்நதப்பட்ட சுகாதார சுட்டிகள் பின்பற்றுப்பட்டு காற்று தரத் நியமங்கள்
2. 2020 ற்கு முன்னர் அனைத்து முக்கிய நகரங்களிலும் இதமான காற்றுத் தரத்திற்கான மேற்பார்வை முறைமையொன்று தாபிக்கப்படுதல்.
3. தூய காற்றை உறுதிப்படுத்துமுகமாக காணிப்பாவனை நிறைவேற்றப்படுதல்.
4. மேலும் சிறந்த ஒழுங்குபடுத்தல் ஆட்சிமுறை அறிமுகப்படுத்தப்பட்டு வீட்டினுள்ளேயும் வெளியேயும், சிறிது காலம் நீடிக்கும் மற்றும் வள வெளிப்படுத்தல்களுக்கான கடுமையான காற்றுத் தர நியமங்கள்.
5. வாகன (புகை) வெளியிடுதலுக்கான கடுமையான நியமங்கள் அறிமுகப்பபடுத்தல் மற்றும் பரீட்சித்தல் மற்றும் மேற்பார்வை உட்கட்டமைப்பு தரமுயர்த்தப்படுதல்.
6. காற்று மாசுறுதலைக் குறைக்குமுகமாக நிர்மாணக் கைத்தொழிலுக்கு ஒழுங்குபடுத்தும் பொறிமுறை அறிமுகப்படுத்தல்.
7. சூழல் ரீதியாகவும் கலாசார ரீதியாகவும் உணர்வுபூர்வமான பகுதிகளை மாசுபடுத்தும் வாகனங்களுக்கான தடைசெய்யப்பட்ட வலயமாக பிரகடணப்படுத்தல்.
8. ஆர்வமுள்ள தரப்பினருக்கு காற்றுத் தரம் தொடர்புபட்ட தரவுகள் கிடைக்கக்கூடியதாக இருப்பது தொடர்பாக தகவல் பெறுவதற்கான உரிமை (RTI) தாபிக்கப்படுதல்.

**தலைமை தாங்கும் அமைச்சு:** சூழல் என்ற விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு.
**ஆதரவு வழங்கும் அமைச்சுககளும் நிறுவனங்களும்:** போக்கு வரத்து, சிவில் விமானப் போக்குவரத்து, கைத்தொழில், வலு மற்றும் சக்தி, சுகாதாரம், மாகாண சபைகள், உள்ளுரதிகார சபைகள், நகர அபிவிருத்தி, இடர் முகாமைத்துவம், விஞ்ஞானம் மறறும் தொழில் நுட்பம், கல்வி, உயர் கல்வி, வெகுசன ஊடகம் மற்றும் தொடர்பாடல், நிதி, தேசியக் கொள்கைகள் ஆகிய விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சுக்களும் நிறுவனங்களும்.

.

## 2 நீர் மற்றும் துப்பரவேற்பாடு[2]

### 2.1 கொள்கை கோட்பாடு

[1] SDG 13 தொடர்பான திட்டங்கள் ( காலநிலை மாற்றம்) மற்றும் எல்லாப் பொருளாதார துறைகளுக்கும் துறைகளுக்கும் இடையிலான இடைத் தொடர்புகள்.

[2] SDG 6 (நீர்) மற்றும் 14 (கடல்சார்) தொடர்பான திட்டங்கள் ( காலநிலை மாற்றம்) மற்றும் எல்லாப் பொருளாதார துறைகளுக்கும் துறைகளுக்கும் இடையிலான இடைத் தொடர்புகள்

நீர் மற்றும் சுகாதாரம் பற்றிய உணர்வு கொண்ட தேசம்

## 2.2 கொள்கைக் கூற்றுகள்

1. அனைவருக்கும் சமமான நீர் ஒதுக்கீட்டிற்கான ஒருங்கிணைந்த நீர் வள முகாமைத்துவத்திற்கான (IWRM) ஒழுங்கமைப்பொன்றை நிறுவுதல் மற்றும் அதன் அமுலாக்கத்தை வலுப்படுத்தல்.
2. ஒதுக்கங்களை ஒருங்கிணைத்தல், நீர் பாவனையின் எல்லா மட்டங்களிலும் மீள் பாவனையும் மீள் சுழற்சியும்.
3. நீர் பத்திரம் மற்றும் பாதுகாப்பு திட்டங்களை மேம்படுத்துதலும் வலுப்படுத்துதலும்.
4. முக்கிய நதிகளில் நீர் தரத்தை மேம்படுத்தலும் வலுப்படுத்தலும்
5. நீர் சேமிப்பு தொழில் நுட்பங்களை மேம்படுத்தலும் வலு வினைத்திறன்மிக்க நீர் பிரயோகமும்.
6. மழை நீர் சேகரிப்பை மேம்படுத்தலும் நீர் உறுஞ்சிப்படைக்கு மீள்சக்தியூட்டலும்.
7. போத்தல் நீர் பதனிடல், விநியோகம் மற்றும் நுகர்வு ஆகியவற்றை மேற்பார்வை செய்தல் மற்றும் கண்காணித்தலை பலப்படுத்தல்.
8. சிறந்த உடல் நலத்திற்காக நடத்தை மற்றும் வாழ்க்கை முறை மாற்றங்களையும் சூழல் தேவைகளுக்காக பேண்தகு நீர் பயன்பாட்டையும் ஊக்குவித்தல்.
9. பாதுகாப்பாக முகாமைத்துவம் செய்யப்படும் துப்பரவேற்பாட்டை ஊக்குவித்தல்.
10. காலநிலை மற்றும் அனர்த்த மீட்சியை நீர் மற்றும் துப்பரவேற்பாட்டு முகாமைத்துவத்தில் ஒழுங்குமுறைப்படுத்தல்.

## 2.3 கொள்கை இலக்குகள்

1. தலா நீர்ப் பாவனையைக் குறைத்தல் அடங்கலாக நீருக்கான கேள்வி முகாமைத்துவத்தை உறுதிபடுத்தல்
2. 2020 ஆம் ஆண்டிற்குள் பாடசாலை நீர் வழங்கல் மற்றும் துப்பரவேற்பாடு ஆகியவற்றைக் கவனித்தல் மற்றும் பராமரித்தலை மேம்படுத்தல்.
3. நீர் சுத்திகரிப்பு மற்றும் விநியோக செயற்பாடுகளில் வலு வினைத்திறன் நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தல்.
4. *மாசுபடுத்துபவர் தண்டம் செலுத்துவார்* கொள்கையை நீரை மாசுபடுத்தும் கைத்தொழில்களுக்கு/செயற்பாடுகளுக்கு கண்டிப்பாக நிலைநாட்டுதல்.
5. 2030 ஆம் ஆண்டிற்கு முன்னர் மக்கள் தொகையில் 60% மானோருக்கு குழாய் நீரையும் அனைவருக்கும் பாதுகாப்பாக முகாமைத்துவம் செய்யப்படும் நீரையும் உறுதி செய்தல்.
6. வருவாய் ஈட்டாத நீர் (நீர் விரயம்) (NRW) தொடர்பான தற்போதைய கொள்கையோடு தொகுக்கப்பட்டு, வருவாய் ஈட்டாத நீர் (நீர் விரயம்) (NRW) குறைப்பிற்கான இலக்குகளை 2018 ஆம் ஆண்டிற்குள் விருத்தி செய்தல் மற்றும் 2030 ஆண்டிற்குள் NRWஐ குறைந்தது 20% க்காவது குறைத்தல்.
7. குடிநீர் கருத்திட்டங்களுக்கு நீர் வழங்கும் மோசமான நிலையிலுள்ள நீரேந்து நிலைகள் 2025 ஆம் ஆண்டிற்கு முன்னர் புனரமைக்கப்படுதல்.
8. தேசிய மழைநீர் கொள்கை மற்றும் ஒழுங்குவிதிகள் ஆகியவற்றின் அமுலாக்கம் உறுதிப்படுத்தப்படுதல்.
9. மிகச் சிறந்த வழக்கங்கள் மற்றும் நீரைப் பேணுதல் மற்றும் பாதுகாத்தலின் முக்கியத்துவம் தொடர்பாக மக்களுக்கு அறிவூட்டுவதற்கும் பழக்குவதற்குமான பயன்மிக்க பிரசாரமொன்றை தொடங்குதல்.

**தலைமை தாங்கும் அமைச்சு:**,நீர்ப்பாசனம் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவம் ஆகிய விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சுகளின் நெருங்கிய ஒத்துழைப்போடு நீர் முகாமைத்துவத்திற்குப் பொறுப்பான அமைச்சு.

**ஆதரவு அமைச்சுகளும் நிறுவனங்களும்:** நீர் வளங்கள், நீர்ப்பாசனம்˙ வலு, சக்தி, கைத்தொழில், விவசாயம், சூழல், சுகாதாரம், மாகாண சபைகள், உள்ளூரதிகார சபைகள், நகர அபிவிருத்தி, வெகுசன ஊடகம், தொடர்பாடல், நிதி, தேசியக் கொள்கைகள் ஆகிய விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சுகளும் நிறுவனங்களும்.

## 3. வலு[3]

### 3.1 கொள்கை கோட்பாடு

வலுபற்றிய உணர்வுகொண்ட, பாதுகாப்பான மற்றும் வலுவிற்காக (வேறு நாட்டில்) தங்கியிராத தேசம்

### 3.2 கொள்கைக் கூற்றுக்கள்

1. வலுவை அனைவருக்கும் கிடைக்கத்தக்கதாகவும் கட்டுபடியானதாகவும் ஆக்குதல்
2. வலு உருவாக்கல் முறையை நியாயபூர்மானதாக்குதல்
3. சுதேச வலு மூலங்களின் பாவனையை ஆகக்கூடிய அளவிற்கு அதிகரித்தல் மற்றும் வலு சுய உற்பத்தியை ஊக்கப்படுத்தல்
4. புதுப்பிக்கத்தக்க வலு மூலங்களின் பாவனையை உச்சப்படுத்தல்
5. *SMART grids*களை ஊக்குவித்தல
6. சமூகத்தில் வினைத்திறன்மிக்க வலு பாவனையை மேம்படுத்தல் உ.ம் வலு அடர்த்திமிகு போக்குவரத்து, கைத்தொழில்கள் மற்றும் கட்டுமான மற்றும் நிர்மாணத் துறைகள்.
7. வலு வழங்கல் மற்றும் சேவைகளின் தரத்தை மேம்படுத்தல்
8. காலநிலை மற்றும் இடர் மீட்சியை வலு அபிவிருத்தித் துறையில் ஒழுங்குமுறைப்படுத்தல்

### 3.3 கொள்கை இலக்குகள்

1. SCP எண்ணக்கருவை சேர்த்துக்கொளளும் புதிய தேசிய வலுக் கொள்கையை 2018 ஆண்டு இறுதிக்குள் நிறுவுதல்
2. வலு சுயதேவை பூர்த்திக்கான செயல்திட்டமொன்றை 2020 ஆம் ஆண்டிற்குள் விருத்தி செய்தல்
3. வலு துறையில் மீள் செல்லுபடியாக்கப்பட்ட “தேசிய ரீதியாக தீர்மானிக்கப்படும் பங்களிப்புகளுக்கான”(NDC) வெளியிடுகை (புகை) இலக்குகளை 2030 ஆண்டிற்குள்’ அடைதல்.

**தலைமை தாங்கும் அமைச்சு:** வலு, சக்திக்குப் பொறுப்பான அமைச்சு
**ஆதரவு அமைச்சுகளும் நிறுவனங்களும்:** கைததொழில்,போக்குவரத்து, மாகாணசபைகள் மற்றும் உள்ளூரதிகார சபைகள், நகர அபிவிருத்தி, இடர் முகாமைத்துவம், விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பம், விவசாயம், நீர், சூழல், கல்வி, உயர் கல்வி, வெகுசன ஊடகம் மற் றும் தொடர்பாடல், நிதி, தேசிய கொள்கைகள் ஆகிவற்றுக்குப் பொறுப்பான அமைச்சுகளும் நிறுவனங்களும்.

## 4. கழிவு[4]

### 4.1 கொள்கைக் கோட்பாடு

SCP தத்துவத்தைப் பின்பற்றி படிநிலை கோட்பாடுகளின் அடிப்படையில் கழிவு முகாமைததுவம் பற்றிய உணர்வுகொண்ட தேசம்.

### 4.2 கொள்கைக் கூற்றுகள்

1. எல்லாக் கழிவு பிரிவுகளுக்கும் “மாசுபடுத்துபவர் தண்டம் செலுத்துவார்” கொள்கையை(PPP) பிரயோகித்தல்

---

(3)SDG 7 (வலு) மற்றும் 13( காலநிலை மாற்றம்)மற்றும் எல்லாப் பொருளாதார துறைகளுக்கும் இடையிலான இடைத் தொடர்புகள்.

(4)SDG 2 (உணவு) 9 (கைத்தொழில்) மற்றும் 11 (நகரங்கள்)மற்றும் எல்லாப் பொருளாதார துறைகளுக்கும் இடையிலான இடைத் தொடர்புகள்.

2. எல்லாத்துறைகளிலும், குறிப்பாக கைத்தொழில்கள், விவசாயம், சுற்றுலா மற்றும் வீடு ஆகியவற்றில் கழிவு முகாமைத்துவத்திற்கான மிகச் சிறந்த வழக்கங்களைப் நிறுவுதல்.
3. ஊள்ளூரதிகார சபைகளில் தின்மக் கழிவு முகாமைத்துவத்திற்கான நிறுவன ரீதியான பொறிமுறையை வலுப்படுத்தல்
4. கழிவுகளிலிருந்து வளங்களின் மீட்சிக்கான செயற்பாடுகளையும் பொறுப்புகளையும் விருத்தி செய்தல் மற்றும் மீட்கப்பட்ட வளங்களின் புத்தாக்க சந்தைப்படுத்தல்.
5. சூழல் பாதுகாப்பு உரிமங்கள் மற்றும் குறித்துரைக்கப்பட்ட கைத்தொழில்களுக்கான கழிவு முகாமைதது‌வ உரிமம் வழஙகல் திட்டம் ஆகியவற்றை ஒழுங்குமுறைப்படுத்தல், மேம்படுத்தல் மற்றும் தரமுயர்த்தல்.
6. பொதியிடல் மற்றும் இலத்திரனியல் போன்ற முன்னுரிமை கழிவு பிரிவுகள் தொடர்புபபட்ட உற்பத்திகளுக்கு *விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பு(EPR)* எண்ணக்கருவை அறிமுகப்படுத்தல்.

### 4.3 கொள்கை இலக்குகள்

1. அனைத்துக் கழிவு பிரிவுகளுக்கும் ஓர் உள்ளடக்க மற்றும் ஒருங்கிணைந்த கண்காணிப்பு முறைமையை தாபித்தல்
2. உள்ளூரதிகார சபை மட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட ஒரு தேசிய கழிவு முகாமைத்துவ தரவுத் தளத்தை தாபித்தல்
3. கழிவை வலுவாக்குதல் அடங்கலாக கழிவுவள பரிவர்த்தனை நிகழ்ச்சித் திட்டத்தை தாபித்தல்
4. தேவையானவிடத்து, மீட்சி மற்றும் மீள்சுழற்சி வசதிகளோடு துப்பரவேற்பாட்டு காணி நிரப்பல்கள் நிறுவப்படுதல், திறந்த முறையில் எரித்தலுக்கான சட்டதிட்டங்கள் நிறுவப்பட்டு நிலைநாட்டப்படுதல்.
5. வீட்டுக் கழிவுப் பிரிவுகள் தொடர்பாக ஒவ்வொரு உள்ளூரதிகார சபைக்கும் கழிவு முகாமைத்துவத் திட்டம் கழிவு முகாமைத்துவ படிநிலை கோட்பாடுகளின்கீழ் தாபிக்கப்படுதல்
6. மாசுபடுத்துபவர் தண்டம் செலுத்துவார் கோட்பாட்டையும் கைத்தொழில் கழிவுகள் (தீங்கு விளைவிக்கும் மற்றும் தீங்கு விளைவிக்காத இரு வகையும்), கட்டுமானம் மற்றும் நிர்மாணம், விவசாயம் மற்றும் விவசாய உணவுப் பதணிடுதல், சுற்றுலா மற்றும் மருத்துவ கழிவுப் பிரிவுகள் முதலிய துறைகளுக்குரிய கழிவுப் பிரிவுகளின் சூழல் ரீதியாக சிறந்த சுத்திகரிப்பு மற்றும் அகற்றல் ஆகியவற்றையும் அறிமகப்படுத்துவதற்குத் தேவைான விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் அறிமுகப்படுத்தப்படுதல்
7. கழிவு முகாமைத்தவத்திற்கான நிதிப் பொறிமுறை தாபிக்கப்படுதல்

8. உள்ளூரதிகார சபைகளுக்கு பொருத்தமான தொழில் நுட்ப உதவி வழங்குவதற்கான ஒரு முறைமை தாபிக்கப்படுதல் மற்றும் அனைத்து உள்ளூரதிகார சபைகளுக்கும் கழிவு முகாமைத்துவத்திற்கான விசேடத்திறன் தொழில்படை விருத்தி செய்யப்படுதல்

**தலைமைதாங்கும் அசைச்சு :**சூழல் என்ற விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு

**ஆதரவு அமைச்சுகளும் நிறுவனங்களும்:** மாகாண சபைகள் மற்றும் உள்ளூரதிகார சபைகள், கைத்தொழில், விவசாயம், வலு, சகதி, சுகாதாரம், நகர அபிவிருத்தி, இடர் முகாமைத்துவம், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம், கல்வி, உயர் கல்வி, வெகுசன ஊடகம் மற்றும் தொலைத்தொடர்பு, நிதி, தேசிய கொள்கைகள் ஆகியவற்றுக்குப் பொறுப்பான அசைச்சுகளும் நிறுவனங்களும்.

## 5. கைத்தொழில்[5]

### 5.1 கொள்கை கோட்பாடு

உறுதியான பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கான பசுமைக் கைத்தொழில்

### 5.2 கொள்கைக் கூற்றுக்கள்

(5)SDG 9(கைத்தொழில்) உடனான இடைத் தொடர்பு மற்றும் 3 ஊடறுக்கும் உதவும் கொள்கைகளையும் (விஞ்ஞானம் மற்றும் தொழில் நுடபம், கல்வி மற்றும் தொடர்பாடல் மற்றும் பசும் பொதுப் பெறுகை) பிரயோகித்தல்.

1. அனைத்து கைத்தொழில்களிலும் வள வினைத்திறன்மிக்க மற்றும் தூய உற்பத்தியை சேர்த்துக்கொள்தல்
2. தற்போதுள்ள கைத்தொழில்களை மேலும் கூடிய வள வினைத்திறன்மிக்க மற்றும் சூழல் ரீதியாக தீங்கற்ற கைத்தொழில்களாக மாற்றுவதற்கு உதவுதல்.
3. வாழ்க்கைச் சுழற்சியில் கிட்டத்தட்ட முழுமையாக மாசற்ற நிலைக்கு இட்டுச் செல்லும் வள வினைத் திறன்மிக்க ஒரு வகையில் பேண்தகு உற்பத்திகள் மற்றும் சேவைகள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் புதிய கைத்தொழில் முயற்சிகளை ஊக்குவித்தல்
4. வள வினைத்திறன்மிக்க தூய உற்பத்தி சேவைகளின் (RECP) வழங்கலை மேம்படுத்த அறிவு, சிறந்த வழக்கங்கங்கள் மற்றும் நுட்பம் ஆகியவற்றை பகிர்ந்துகொள்தல்
5. சூழல் ரீதியாக உறுதியான தொழில் நுட்பங்களை வழங்குதல், மாற்றுதல் மற்றும் உள்ளூர் நிலைக்கு இசைவாக்குதல் ஆகியவற்றை ஊக்குவித்தல் மற்றும் அதிகம் மாசுபடுத்தும் மற்றும் வள செறிவுடைய கைத்தொழில்கள் மேலும் கூடிய பேனண்தகு தன்மைகொண்டவையாக மாறக்கூடியதாக நவீன தொழில் நுட்பங்களை ஊக்குவித்தல்

6. அடிப்படை லூப் மற்றும் கைத்தொழில் ஒத்துழைப்புறவை நெருக்கமாக்குதல் போன்ற கோட்பாடுகளை இணைத்து சூழல்- கைத்தொழில் பேட்டைகள் தாபிக்கப்படுவதை உறுதிப்படுத்தல்
7. சூழல் நேய உற்பத்திகள் மற்றும் சேவைகள் ஆகியவற்றில் முதலீடு செய்து, குறிப்பாக சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு (SME) பசுமை நிதி கிடைக்கச் செய்தல்
8. பசுமை கைத்தொழில் செயற்பாடுகளை ஊக்குவிப்பதற்கு நிதி மற்றும் வரி ஊக்குவிப்புகளை அறிமுகப்படுத்தல் மற்றும் கிடைக்கக்கூடிய மிகச் சிறந்த தொழில் நுட்பங்களை இறக்குமதி செய்தல்
9. அனைத்து கைத்தொழில்களுக்கும் பசுமை அறிக்கையிடல் பிரயோகத்தை மேம்படுத்தல்
10. காலநிலை மற்றும் இடர் மீட்சியை கைத்தொழில் துறையின் அபிவிருத்தியில் ஒழுங்குமுறைப்படுத்தல்

## 5.3 கொள்கை இலக்குகள்

1. சூழல் ரீதியாக உணர்வுமிக்க அல்லது மாசுபடுத்தும் கைத்தொழில் துறைககளுக்கு வள வினைத்திறன்மிக்க தூய உற்பத்தியை(RECP) 2025 ஆண்டிற்கு முன்னர் கட்டாயமாக்குதல்
2. அதிகரித்த வளப்பபாவனை வினைத்திறன், தூய மற்றும் சூழல் ரீதியாக உறுதியான கைத்தொழில்கள் மற்றும் கைத்தொழில் நடைமுறைகள் ஆகியவற்றோடு கைத்தொழில் உட்கட்டமைகப்புகளை 2030ஆம் ஆண்டிற்குள் மேம்படுத்தலும் அவற்றை பேண்தகு தன்மைகொண்டதாக ஆக்குதலும்
3. அனைத்து கைத்தொழில் பேட்கைளும் 2030 ஆண்டிற்குள் சூழல்நேய கைத்தொழில் பேட்கைளாக மாற்றப்படுதல்
4. கைத்தொழிலுக்கு பசுமை நிதித் திட்டங்கள் மற்றும் சூழல் ஊக்குவிப்புகள் நிறுவப்படுதல்
5. உற்பத்திப் பொருள் விலையிடலில் விரிவான உற்பத்தியாளர் பொறுப்பு(EPR) சேர்த்துக்கொள்ளப்படுதல்

**தலைமை தாங்கும் அமைச்சு:**கைத்தொழில் என்ற விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு
**ஆதரவு அமைச்சுகளும் நிறுவனங்களும்:**சூழல், இடர்முகாமைதத்துவம், விஞ்ஞானம மற்றும் தொழில் நுட்பம், கல்வி, நீர் வழங்கல், வலு, சுகாதாரம், உயர் கல்வி, வெகுசன ஊடகம் மற்றும் தொடர்பாடல், நிதி, தேசியக் கொள்கைகள் ஆகியவற்றுக்குப் பொறுப்பான அமைச்சுகளும் நிறுவனங்களும்

# 6. உணவு[6]

## 6.1 கொள்கைக் கோட்பாடு

அனைவருக்கும் கட்டுபடியயாகும், கிடைக்கக்கூடிய மற்றும் பாதுகாப்பான உணவிற்கு வழி வகுக்கும் பேண்தகு வகையில் உற்பத்தி செய்யப்படும் உணவு

(6)SDG 2(உணவு) வுடன் இடைத்தொடர்பு மற்றும் 3 ஊடறக்கும் உதவும் கொள்கைகளையும் (விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம், கலவி மற்றும் தொடர்பாடல் மற்றும் பசுமை பொதுப் பெறுகை)பிரயோகித்தல்

### 6.2 கொள்கைக் கூற்றுகள்

1. சமூகத்தின் அனைத்துப் பிரிவினரதும் போதுமான ஊட்டச்சத்து நிலையை உறுதிப்படுத்தல்
2. நாட்டில் தாராளமாகக் கிடைக்காத இறக்குமதி செயயப்படும் உணவின் தரத்தையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தல்
3. தரமான மற்றும் பாதுகாப்பான மிகை உணவு உற்பத்தியை ஏற்றுமதி செய்வதன்மூலம் கணிசமான வருமானத்தை ஈட்டுதல்
4. பேண்தகு மற்றும் பாதுகாப்பான முறைமைகளை ஏற்படுத்துமுகமாக உணவு உற்பத்தியில் காணி, நீர், வளமாக்கிகள், பூச்சிக் கொல்லிகள், வலு மற்றும் மனித வளம் ஆகியவற்றின் வினைத்திறன்மிக்க பாவனையை அதிகரித்தல்
5. கலப்புப் பூச்சிக் கொல்லிகள் மற்றும் வளமாக்கிகள் ஆகியவற்றின் பாவனையை ஆகக்குறைந்த அளவிற்குக் குறைத்தல் மற்றும் பாரம்பரிய மற்றும் சேதன விவசாய மற்றும் சிறந்த விவசாய வழக்கங்களைப்(GAP) பாதுகாத்து ஊக்குவித்தல்
6. அறுவடைக்கு முந்திய மற்றும் பிந்திய இழப்புகளை குறைக்கு முகமாக பெறுமதி வழங்கல் சங்கிலியை பலப்படுத்தல் மற்றும் உணவு முறைமைகளில் விரயமே இல்லாத நிலையை இலக்கு வைத்தல்
7. சூழல் லேபல் இடல் திட்டங்கள பற்றி (உணவு மற்றும் தொடர்வுடைய பொதியிடல் தொடர்பானவை) ஏனைய நாடுகளோடு பரஸ்பர அங்கீகரிப்பு ஒப்பந்தங்கள் செய்து, வர்த்தகத்திற்கும் புதிய சந்தைகளின் வளர்ச்சிக்கும் வசதியேற்படுத்தல்

### 6.3 கொள்கை இலக்குகள்

1. ஊட்டச் சத்துமிக்க உணவின் கட்டுபடித்தன்மை. பெற்றுக் கொள்ளக்கூடிய தன்மை மற்றும் கிடைக்கும் தன்மை ஆகிவற்றின் மூலம் சமூத்தின் அனைத்துப் பிரிவினரதும் போதிய ஊட்டமச் சத்து நிலையை உறுதிப்படுத்தல்
2. புதிய தொழில் நுட்பங்கள் மற்றும் உயிர் சேதன வளங்கள் ஆகிவற்றின் பாவனையோடு ஒன்றிணைந்த தாவர ஊட்டச் சத்துகள் மற்றும் பூச்சி முகாமைத்துவம் ஆகியவற்றை ஊக்குவிப்பதன்மூலம் கலப்பு பூச்சிக்கொல்லிகள் மற்றும் வளமாக்கிகளின் பாவனையை ஆகக் குறைந்த அளவிற்குக் குறைத்தல்
3. 2020 ஆம் ஆண்டிற்குள் வழங்கல் சங்கிலியில் உணவு இழப்புகளை(அறுவடைக்கு முந்திய/பிந்திய) 20% ஆலும் 2030 ஆம் ஆண்டிற்குள் மேலுமொரு 20% ஆலும் குறைத்தல்
4. உணவு விரயத்தை 2020 ஆண்டிற்குள் 10% ஆலும் 2030 ஆம் ஆண்டிற்குள் மேலுமொரு 20% ஆலும் குறைத்தல்
5. *சூழல் லேபல் இடல்* கொள்கை மற்றும் சட்ட வரைச்சட்டகம் ஆகியன 2020 ஆண்டிற்கு முன்னர் விருத்தி செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டிற்குள் அமுல்பத்தப்படுதல்

**தலைமை தாங்கும் அமைச்சு:** பெருந்தோட்டக் கைததொழிலுக்கு பொறுப்பான அமைச்சுடன் இணைந்து விவசாயத்திற்குப் பொறுப்பான அமைச்சு.

**ஆதரவு அமைச்சுகளும் நிறுவனங்களும்:** உணவுப் பதனிடல், விவசாயம், கால்நடை, கடற்றொழில், நீர் வளங்கள், நீரப்பாசனம், வலு மற்றும் சக்தி, கைத்தொழில். சூழல், சுகாதாரம், பெருந்தோட்டக் கைத்தொழில், பாதுகாப்பு, சுற்றுலா, இடர் முகாமைத்துவம், விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பம், கல்வி, உயர் கல்வி, வெகுசன ஊடகம் மற்றும் தொடர்பாடல், நிதி, தேசியக் கொள்கைகள் ஆகியவற்றிற்கு பொறுப்பான அமைச்சுகளும் நிறுவனங்களும்

## 7. கட்டிட மற்றும் நிர்மாணம்[7]

### 7.1 கொள்கைக் கோட்பாடு

சூழல் ரீதயாக பேண்தகு, சமூக ரீதியாக ஏற்றுக்கொள்ளத்தக்க, பொரளாதார ரீதியாக உறுதியான, கலாசார ரீதியாக ஏற்றுக்கொள்ளத்தக்க, இடரிலிருந்து மீட்சி பெறக்கூடிய மற்றும் வாழ்வதற்குகந்த நகரங்கள் கிராமங்கள் மற்றும் புகலிடங்கள்.

### 7.2 கொள்கைக் கூற்றுகள்

(7)SDG 11(நகரங்கள்) வுடன் இடைத்தொடர்பு மற்றும் 3 ஊடறக்கும் உதவும் கொள்கைகளையும் (விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம், கலவி மற்றும் தொடர்பாடல் மற்றும் பசுமை பொதுப் பெறுகை)பிரயோகித்தல்

1. வழங்கல் சங்கிலியில் (கட்டிடப் பொருட்கள் வழங்கல், கட்டிடம் பாவிக்கப்படும்போது கட்டிடட சாதனப் பொருட்களின் பாவனை, வாழ்வு முடிவின்போது நியாயபூர்வாமான தகர்ப்பு) அடங்கலாக கட்டடி துறையில் பேண்தகு தன்மையை மேம்படுத்தல்
2. பேண்தகு வகையில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் புத்தாக்க வள வினைத்திறன்மிக்க வடிவமைப்புகள் மற்றும் நிர்மாண தொழில் நுட்பங்கள் ஆகியவற்றை பயன்படுததுவதற்கும் மீளப் பயன்படுத்துவதற்கும் நிர்மாணத் துறைக்கு வழிகாட்டுதல் மற்றும் வசதியேற்படுத்தல்
3. கழிவு உருவாக்கத்தை ஆகக் குறைந்த அளவிற்குக் குறைக்குமுகமாக அடக்கமான கட்டடிகலையை ஊக்குவித்தல், வள வினைத்திறனை ஊக்குவித்தல், கட்டிடத்தைப் பயன்படுத்தும்போது ஆரோக்கியமான வாழ்வை மேம்படுத்தல்
4. ஆரோக்கியமான வாழ்விற்காக சாதனங்கள் பிடிக்கும் சூழல் இட அளவை ஆகக் குறைந்த அளவிற்குக் குறைக்குமுகமாக வலு மற்றும் நீர் வினைத்திறன்கொண்ட சாதனங்களை ஊக்குவித்தல்
5. பேண்தகு கட்டிட நிர்மாணத்தை(SBC) மேம்பத்த ஆதரவளிக்கும் தேசியச் சட்டங்களைத் தயாரித்தல் மற்றும் விருத்தி செய்தல் ஆகயிவற்றுக்கான வழிகாட்டு நெறிகளை விருத்தி செய்தல் மற்றும் சிறந்த வழக்கங்களை நிலைநாட்டுதல்
6. சூழல் தாக்க மதிப்பீடு(EIA) போன்ற தற்போதுள்ள சட்ட அமைப்புகளை மீளாய்வு செய்தல், வலுப்படுத்தல் மற்றும் சக்தியூட்டுதல்
7. நகரங்களின் பாதகமான தலா சூழல் தாக்கத்தை குறைத்தல்
8. காலநிலைக்குத் தாக்குப் பிடிக்கும் கட்டிடங்களையும் நிர்மாணங்களையும் ஊக்குவித்தல்

### 7.3 கொள்கை இலக்குகள்

1. பெரிய கட்டிடங்களில் கட்டிட முகாமைத்துவ முறைமையை தாபித்தல்
2. எதிர் காலத்தில் கட்டப்படும் அனைத்தது அரசதுறைக் கட்டிடங்களும் பசுமை கட்டிட சான்றிதழுக்கு அமைவாக இருப்பதை உறுதிப்படுத்த உள்ளூர் அதிகாரசபை ஒழுங்குவிதிகளைத திருத்துதல்
3. அரசுக்குச் சொநதமான அல்லது அரசாங்கத்தினால் கட்டுப்படுத்தப்படும் கட்டிடங்களில் விசேட வலு மற்றும் நீர் பாவனையை 2020 ஆம் ஆண்டிற்குள் 10%ஆலும் 2025 ஆண்டிற்குள்15% ஆலும் 2030 ஆம் ஆண்டிற்குள் 20%ஆலும் குறைத்தல்
4. வெவ்வேறு வகையான கட்டிடங்களுக்கும் வலு செயலாற்றுகைக்கான எல்லையை நிர்ணயித்தல்
5. அனைத்து புதிய அரசதுறை கட்டிடங்களுக்கும் புதுப்பிக்கத்தக்க வலு வழங்கல் முறைமைகளை நிலைநாட்டுதல்
6. 2025 ஆம் ஆண்டிற்குள் மேல் மாகாணம் ஒரு மாதிரி நேர்த்தியான நகரை (SMART CITY)கொண்டிருத்தல்
7. அனைவருக்கும் 2030 ஆம் ஆண்டிற்குள் வாழத்தகுந்த சூழலை கட்டியெழுப்புதல்
8. பேண்தகு கட்டிட நிர்மாணத்தின் பயனுறுதிமிக்க அமுலாக்கத்திற்காக மனித மூலதனத்தை விருத்தி செய்தல்

**தலைமை தாங்கும் அமைச்சு:**வீடமைப்பு மற்றும் நிர்மாணத்திற்குப் பொறுப்பான அமைச்சு

**ஆதரவு அமைச்சுகளும் நிறுவனங்களும்:**கைத்தொழில், மாகாண சபைகள் மற்றும் உள்ளூரதிகார சபைகள், நகர அபிவிருத்தி, இடர் முாமைத்தவம், சக்தி மற்றம் வலு, சுகாதாரம், பெருந்தெருக்கள், விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பம், கல்வி, உயர்கல்வி, வெகுசன ஊடகம் மற்றம் தொடர்பாடல், நிதி, தேசியக்கொள்கைகள் ஆகியவற்றுக்குப் பொறுப்பான அமைசசுகளும் நிறுவனங்களும்.

## 8. போக்குவரத்து[8]

### 8.1 கொள்கைக் கோட்பாடு

(8)SDG 7(வலு), 11 (நகரங்கள்), 13(காலநிலை மாற்றம்) வுடன் இடைத்தொடர்பு மற்றும் 3 ஊடறக்கும் உதவும் கொள்கைகளையும் (விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம், கலவி மற்றும் தொடர்பாடல் மற்றும் பசுமை பொதுப் பெறுகை)பிரயோகித்தல்

.

சமூகத்திற்கு ஏற்படும் ஆகக் குறைந்த சுகாதார தாக்கங்களோடு அனைவருக்கும் காலம், வலு, வள வினைத்திறன்மிக்கதும் பாதுகாப்பானதும் பயன்மிக்கதுமான போக்குவரத்து முறைமை

### 8.2 கொள்கைக் கூற்றுகள்

1. அதிகரித்த அடையக்கூடிய தன்மைக்காக நகர்தலின் "ஆகக்குறைந்ததாக்கப்பட்ட அணுகுமுறை"மற்றும் ''தவிர், மாற்று மற்றும் மேம்படுத்து'' என்பதன் அடிப்படையிலான போக்குவரத்து திட்டமிடல்
2. தற்போதுள்ள போக்குவரத்து முறைமைகளின் பாவனையை உச்சப்படுத்தல்
3. நம்பகமான, கட்டுபடியாகும் மற்றும் வசதியான பொதுப் போக்குவரத்து முறைமையை ஊக்குவித்தல்
4. பொருத்தமானவிடங்களில் தனியார் துறையிலிருந்து பொதுத் துறைக்கான மாதிரி மாற்றத்தை ஊக்குவித்தல்
5. பயன்படுத்துவோருக்கு வகைகளைத் தெரிவு செய்யும் தெரிவை வழங்குதல்
6. பொது போக்குவரத்தை ஒருங்கிணைத்து வகைகளுக்கிடையிலான போக்குவரத்து முறைமைகளை ஊக்குவித்தல் மற்றும் பயணிகளின் கேள்விக்கேற்ப நகர்ப் புறங்களில் பாரிய துரித இடைமாற்று முறைமைகளை ஊக்குவித்தல்
7. Ngz;jF nghJ Nghf;Ftuj;J Kiwikfis Cf;Ftpf;FKfkhf xOq;FgLj;jy; mikg;Gfis mwpKfg;gLj;jy;
8. பொது போக்குவரத்திற்கு தர நியமங்ககளை அறிமுகம் செய்தல்
9. பொது போக்குவரத்து வலையமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி ஆகியவற்றைக்கொண்டு காணிப் பாவனையை ஒருங்கிணைப்பதையும் உச்சப்படுத்துவதையும் ஊக்குவித்தல்
10. வினைத்திறன்மிக்க வழங்கல் சங்கிலி முறையைக் கொண்டிருக்குமுகமாக மிகவும் பொருத்தமான கிளைகளை ஒருங்கிணைப்பதன்மூலம் கப்பல் சரக்கு போக்குவரத்து முறைமைகளை விருத்திசெய்தல்

### 8.3 கொள்கை இலக்குகள்

1. போக்குவரத்து முறைகளில் வலு வினைத்திறனை ஊக்குவித்தல்
2. பொதுப் போக்குவரத்து மாதிரிகளை பகிர்ந்துகொள்ளலை அதிகரித்தல்
3. நவீன பயணிகள் போக்குவரத்து (MRT, LRT, Monorail, BRT, ITS) முறைமைகளை அறிமுகம் செய்தல் அத்துடன்/அல்லது கிராம மற்றும் நகர்ப்புறங்களில் அபிவிருத்தி செய்தல்
4. புகையிரத மின்மயமாக்கலை அறிமுகப்படுத்தல்
5. உள்நிலப்பகுதி நீர் போக்குவரத்தை பொருத்தமான இடங்களில் அறிமுகப்படுத்தல்
6. பயண நேரத்தைக் குறைத்தல்
7. நகர வீதி வலையமைப்புகளில் சைக்கிள் ஒழுங்கைகள் மற்றும் நடைபாதைகளை அறிமுகம் செய்தல்

**தலைமை தாங்கும் அமைச்சு:**பெருந்தெருக்கள் அமைச்சின் ஒத்துழைப்போடு போகுவரத்துக்கு பொறுப்பான அமைச்சு

**ஆதரவு அமைச்சுகளும் நிறுவனங்களும்:**வலு மற்றும் சக்தி, மாகாண சபைகள் மற்றும் உள்ளுர் அதிகார சபைகள், நகர அபிவிருத்தி, இடர் முகாமைத்தும், கைத்தொழில், விவசாயம், விஞ்ஞானமும் தொழில்நுட்பமும், சூழல், கல்வி, உயர்கல்வி, வெகுசன ஊடகமும் தொடர்பாடலும், நிதி, தேசியக் கொள்கைகள் ஆகிய விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சுக்கள்

## 9. சுற்றுலா[9]

### 9.1 கொள்கைக் கோட்பாடுகள்

இலங்கை சுற்றுலாக் கைத்தொழில் சூழல் ரீதியாகவும் சமூக ரீதியாகவும் கலாசார ரீதியாகவும் அறநெறி ரீதியாகவும் பொறுப்பு மிக்கதாகவும் பொருளாதார ரீதியாக உறுதியானதாகவும் இருத்தல்

(9)SDG 11 (நகரங்கள்), 15(வனவிலங்குகள்) வுடன் இடைத்தொடர்பு மற்றும் 3 ஊடறக்கும் உதவும் கொள்கைகளையும் (விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம், கலவி மற்றும் தொடர்பாடல் மற்றும் பசுமை பொதுப் பெறுகை)பிரயோகித்தல்

### 9.2 கொள்கைக் கூற்றுகள்

1. சுற்றுலா தொடர்புபட்ட அனைத்து சேவைகளிலும் (களியாட்டம்/ பொழுதுபோக்கு வாய்ப்புகள்/ நினைவுச் சின்னங்கள் முதலியன) SCPமிகச் சிறந்த வழக்கங்களை ஊக்குவித்தல்
2. சுற்றுலாத் துறை சேவைகளின் - ஹொட்டேல், உணவு விடுதி, பொழுது போக்குகள், கடைகள், சுற்றுலா இயக்குபவர்கள், கலாசார நிகழ்வுகள் முதலியன – வகைப்படுத்தல் எடுகோள்களில் SCPஅம்சங்களை அறிமுகப்படுத்தல்
3. வள வினைத்திறனுக்கு ஓர் உதாரணத்தை ஏற்படுத்துமுகமாக "வளச் செறிவு மிக்க சுற்றுலாத் துறையை" ஊக்குவித்தல்
4. வருகை தருவோர் அனைவருக்கும் பேண்தகு சுற்றுலாவில் அனைத்தையும் உள்ளடக்கும் ஒரு வாழ்நாள் அனுபவத்தை வழங்குதல்
5. இயற்கை வளங்கள் மற்றும் வனவிலங்குகள் ஆகியவற்றைப் பாதுகாப்பதற்கும் உயிர் மற்றும் கலாசார பன்மைத்துவத்தை மேம்படுத்துவதற்கும் சுற்றுலாவை ஒரு கருவியாகப் பயன்படுத்தல்.
6. காலநிலை மற்றும் இடர் மீட்சி ஆகியவற்றை சுற்றுலாத்துறை அபிவிருத்தியில் ஒழுங்குமுறைப்படுத்தல்

### 9.3 கொள்கை இலக்குகள்

1. சுற்றுலாக் கைத்தொழில் SCP இன் மிகச் சிறந்த வழக்கங்களின் பாவனையை அதிகரிக்குமுகமாக ஒழுங்குபடுத்தல் வரைச்சட்டகத்தை வவலுப்படுத்தல்
2. பேண்தகு சுற்றுலாவிற்கு பெறுமதி சேர்ப்பதற்காக அனைத்து பங்கீடுபாட்டாளர்கள் மத்தியிலும் நெருக்கமான தொடர்பாடலுக்கு/ ஒத்துழைப்பிற்கு வசதியேற்படுத்துமுகமாக எல்லா சுற்றுலாத் தளங்களிலும் ஆலோசனை பொறிமுறைகளைத் தாபித்தல்
3. 2020 ஆம் ஆண்டிற்குள் SCPஅம்சங்களோடு சுற்றுலா ஓட்டல்கள் மற்றும் உணவு விடுதிள் ஆகியவற்றின் வகைப்படுத்தல் நிறுவப்படுதல்
4. இலங்கையை ஒரு சூழல்-நேய தீவுதேசமாக காட்டுவதற்கு (சுற்றுலாத்) தளங்களை சந்தைப்படுத்துவதற்கான முயற்சிகளை மேம்படுத்தல்
5. சர்வதேச நியமங்களுக்கமைய "சூழல்-சுற்றுலா" ஊக்குவிக்கப்படுதல்
6. அனைத்து சூழல் மற்றும் கலாசார ரீதியாக உணர்வுமிக்க சுற்றுலாத் தளங்கள் மற்றும் முடிவிடங்கள் ஆகியவற்றின் நடப்புக் கொள்திறனுக்கு ஏற்ப உரிய அழுத்தத்துடன் முகாமைத்துவப்படுத்தப்படல்

**தலைமை தாங்கும் அமைச்சு:**சுற்றுலாத் துறைக்குப் பொறுப்பான அமைச்சு
**ஆதரவு அமைச்சுகளும் நிறுவனங்களும்:**கலாசாரம், உள்நாட்டலுவல்கள், சூழல், சுகாதாரம், வெளிநாட்டலுவல்கள், கைத்தொழில், போக்குவரத்து, விவசாயம், வலு மற்றும் சக்தி, இடர் முகாமைத்துவம், கல்வி, உயர் கல்வி, வெகுசன ஊடகம் மற்றும் தொடர்பாடல், நிதி, தேசியக் கொள்கைகள் ஆகியவற்றுக்குப் பொறுப்பான அமைச்சுக்கள்.

## 10. சுகாதாரம்[10]

### 10.1 கொள்கைக் கோட்பாடு

பேண்தகு நுகர்வு வழக்கங்களோடு ஒரு பசுமைச் சூழலில் வாழுகின்ற ஆரோக்கியமான தேசம்

### 10.2 கொள்கைக் கூற்றுக்கள்

1. சுகாதாரத் துறையில் அனைத்து மட்டங்களிலும் பேண்தகு நுகர்வுப் பழக்கங்களை உறுதிப்படுத்தல்
2. அனைத்து சுகாதார கொள்கைகளிலும் பேண்தகு நுகர்வுப் பழக்கங்களையும் கோட்பாடுகளையும் இணைத்துக்கொள்ளல்

[10] SDG 3 (சுகாதாரம்) வுடன் இடைத்தொடர்பு மற்றும் 3 ஊடறக்கும் உதவும் கொள்கைகளையும் (விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம், கலவி மற்றும் தொடர்பாடல் மற்றும் பசுமை பொதுப் பெறுகை)பிரயோகித்தல்

3. அனைத்து சுகாதார பராமரிப்பு நிறுவனங்களையும் பசுமை மற்றும் ஆரோக்கியமான தொழில் செய்யும் பின்னணியில் மாற்றியமைத்தல்
4. சுகாதார பராமரிப்பில் பாரம்பரிய மிகச் சிறந்த வழக்கங்களை மேம்படுத்தல்
5. தேசிய சுகாதார தகவல் முறைமையை வலுப்படுத்தல்
6. ஆரோக்கியமான வாழ்க்கை முறையை ஊக்குவித்தல்

### 10.3 கொள்கை இலக்குகள்

1. 2020 ஆம் ஆண்டிற்குள் சுகாதார பராமரிப்புத் துறையில் உள்ள அனைத்து பங்கீடுபாட்டாளர்கள் மத்தியிலும் பேண்தகு நுகர்வு முறைகள் பற்றிய புரிந்துணர்வு, கருத்தொருமைப்பாடு மற்றும் அதன் வழக்கங்கள் ஆகியவற்றை வலுப்படுத்தல்.
2. 2025 ஆம் ஆண்டிற்குள் குணமாக்கல், தடுப்பு, ஊக்குவிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு சுகாதாரப் பராமரிப்பு வழங்கல் ஆகியவற்றை பேண்தகு நுகர்வில் இணைப்பதன் மூலம் சுகாதாரப் பராமரிப்புச் செலவு வினைத்திறன் 25% ஆல் அதிகரிக்கப்படுதல்.
3. 2030 ஆம் ஆண்டிற்குள் சுகாதார பராமரிப்பு நிறுவனங்கள் பசுமை தொழில்புரி பின்னணிக்கு மாற்றப்படுதல்
4. சுகாதார பராமரிப்புத் தகவலுக்கான சுத்தீகரிப்பு வீட்டுப் பொறிமுறை நிறுவப்படுதல்.

**தலைமை தாங்கும் அமைச்சு:** சுகாதார, போசனை மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சு
**ஆதரவு அமைச்சுகளும் நிறுவனங்களும்:** கல்லி, உயர்கல்வி, துப்பரவேற்பாடு, நீர்வழங்கல், சூழல், வெகுசன ஊடகம், மாகாணசபைகள் மற்றும் உள்ளூர் அதிகாரசபைகள் ஆகியவற்றுக்கு பொறுப்பான அமைச்சுக்களும் நிறுவனங்களும்.

## ஊடறுக்கும் கொள்கைகள்

10 முக்கிய கருப்பொருள்கள் மற்றும் துறைகளுக்கு மேலதிகமாக முக்கிய கருப்பொருள்களுக்கு பொருந்தக்கூடிய மூன்று (3) ஊடறுக்கும் கொள்கைகளும் இனங்காணப்பட்டுள்ளன:

A. கல்வி மற்றும் தொடர்பாடல்
B. விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்
C. பொதுப் பெறுகை

## கல்வி மற்றும் தொடர்பாடல்

### A.1 கொள்கைக் கோட்பாடு

SCP தொடர்பாக அறிந்துள்ள, உணர்வுள்ள, உட்படுத்தும் மற்றும் அதனால் வலுப்படுத்தப்பட்ட தேசம்

### A.2 கொள்கைக் கூற்றுக்கள்

1. SCP எண்ணக்கருவை ஒரு வாழ்க்கைத் திறனாக இலங்கைக் கல்வி முறையில் அறிமுகப்படுத்தல் I
2. SCPஐ ஊக்குவிக்கும் புத்தாக்க ஆராய்ச்சி கலாசாரத்தை உருவாக்குதல்
3. அனைத்து துறைகளிலும் SCP ஐ ஊக்குவிப்பதற்கு ஒரு தேசிய பெரும் மனித மூலதனத்தை விருத்தி செய்தல்
4. தனியார்த் துறையில் SCP பற்றிய (அவ் எண்ணக்கருவும் அதன் பயன்களும்) விழிப்புணர்வை ஊக்குவித்து அதன்மூலம் ஒரு சிறந்த/பேண்தகு வாழ்க்கை முறையாக SCPஐ ஏற்றிப் புகழ்வதற்கு எல்லா பிரசைகளுக்கும் உணர்வூட்டுதல்
5. SCP ஐ நோக்கி மாறுவதற்காக நடத்தை மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு தொடர்பாடலை மேம்படுத்துதல்
6. SCP ஐ நோக்கி மாறுவதற்காக சமூக நடத்தை மாற்றத்திற்காக ஊடக தர்மத்தை மேம்படுத்தல்
7. சூழல் லேபிள்கள் மூலம் பொருட்கள் மற்றும் நடைமுறைகளின் தாக்கங்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமையை உறுதிப்படுத்தல்.
8. தகவல்களின் மூலமாக பேண்தகு உற்பத்திகள் மற்றும் சேவைகளுக்கான நுகர்வோரின் தெரிவுகளுக்கும் நடத்தை மாற்றங்களுக்குமான வழிகாட்டலும் ஆதரவும்.
9. நுகர்வோர் தெரிவுகளிலும் நடத்தையிலும் மிகச் சிறந்த வழக்கங்களை உறுதிப்படுத்துவதற்கும்

பேணிப்பாதுகாப்பதற்கும் பொதுத்துறை - தனியார்துறை உறவுகளில் மாற்றங்களை ஏற்படுத்தல்

10. SCP தொடர்பாக தேசிய பல்பங்கீடுபாட்டாளர்கள் வட்டமேசைச் கருத்தரங்குளை காலத்திற்கு காலம் நடத்துதல்

### A.3 கொள்கை இலக்குகள்

1. 2025 ஆம் ஆண்டிற்கு முன்னர், இளம் பராய கல்வி, பாடசாலைக் கல்வி, பல்பலைக்கழக கல்வி, வாழ்க்கைத் தொழில் கல்வி மற்றும் தொழில்சார் கல்வி முறைகளில் ஒரு வாழ்க்கைத் திறனாக SCP ஐ அறிமுகப்படுத்தல்
2. உள்ளுர் அதிகாரசபை அடங்கலாக பொதுத் துறை தாபனங்களில் SPP ஐ ஊக்குவித்தல்
3. பொதுமக்களின் இலக்கிடப்பட்ட குழுவினருக்கு SCP தொடர்பாக (சமூக) ஊடக நிகழ்ச்சித் திட்டங்களை ஊக்குவித்தல்.
4. SCP தொடர்பாக பொதுமக்களுக்கு இலத்திரனியல் கற்றல் வாய்ப்புக்களை வழங்குதல்
5. அனைத்திலும் வியாபிக்கும் தேசிய SCP கொள்கையிலும் செயல் திட்டங்கள் அல்லது தொடர்புபட்ட மூலோபாயங்களிலும் இனங்காணப்பட்ட முன்னுரிமைகளுக்கு அமைய கல்விக் கொள்கைகளின் மீளாய்விற்கு ஆதரவளித்தல்
6. கல்வி தொடர்பான தேசிய மூலோபாயங்களிலும் அபிவிருத்தித் திட்டங்களிலும் SCP சுட்டிகளும் கண்காணிப்பு வரைச்சட்டகங்களும் இணைத்துக்கொள்ளப்படுதல்.
7. 2020 ஆம் ஆண்டிற்குள் உற்பத்திப் பொருட்கள் மற்றும் நடைமுறைகளின் தாக்கங்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமை நிலைநாட்டப்படுதல்.
8. SCP தொடர்பாக ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றுக்கான நிதியளிப்பு ஆதரவு ஏற்பாடு செய்யப்படுதல்.
9. SCPஇன் பொருளாதார பயன்கள் தொடர்பாக தனியார் துறையினருக்கு அறிவூட்டுதல்

## B விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்

### B.1 கொள்கைக் கோட்பாடுகள்

வாழ்க்கை வட்ட சிந்தனையின் அடிப்படையிலான விஞ்ஞானமும் மொழில்நுட்பமும் (மற்றும் ஆராய்ச்சியும் அபிவிருத்தியும்) பேண்தகு அபிவிருத்திக்கான முன் நிபந்தனையாக அங்கீகரிக்கப்படுதல்

### B.2 கொள்கைக் கூற்றுக்கள்.

1. அனைத்துத் துறைகள் மத்தியிலும் SCP தொடர்பாக ஓர் உதவும் புத்தாக்க கலாசாரத்தை உருவாக்குதல்
2. பல்வேறு துறைகளுக்கும் பொருத்தமான உரிய வள வினைத்திறன் தொழில்நுட்பங்களை (சூழல்-புத்தாக்கம்/சூழல் ரீதியாக உறுதியான தொழில்நுட்பங்கள்) விருத்திசெய்து, ஊக்குவித்து பேண்தகு நுகர்வு மற்றும் பொருட்களின் உற்பத்தி மற்றும் சேவைகள் ஆகியவற்றை உறுதிப்படுத்தல்.
3. SCP தொடர்பான விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப சாதனைகள் கைத்தொழில்களுக்கும் பொதுமக்களுக்கும் தாராளமாக கிடைக்கக்கூடியதாக இருப்பதை உறுதி செய்தல்
4. தொழில்நுட்ப மாற்றம், பொதுத்துறை மற்றும் தனியார்துறை பங்குடமை(PPP) வாயிலாக வர்த்தகமயப்படுத்தலுக்கான வள வினைத்திறன்மிக்க தொழில் நுட்பங்கள் ஆகியவற்றை ஊக்குவித்தல்
5. அனைத்துத் துறைகளிலும் SCP தொடர்பான சுதேச அறிவை போற்றிப்பேணுவதற்கு விஞ்ஞான அடிப்படையிலான சான்றுகளை ஆவணப்படுத்தல், வெளியிடல் மற்றும் ஊக்குவித்தல்
6. வாழ்க்கை வட்டச் சிந்தனைக்கான அறிவுத் தளத்தை விருத்தி செய்தல் மற்றும் பெறுமதி மற்றும் வழங்கல் சங்கிலிகளில் தூய மற்றும் பாதுகாப்பான உற்பத்திகளை ஊக்குவிக்க வாழ்க்கை வட்ட மதிப்பீடுகளை பிரயோகித்தல்
7. சில்லறை வியாபாரிகள், நுகர்வோர் மற்றும் உற்பத்தியாளர்களுக்கு நடத்தை மற்றும் வாழ்க்கைமுறை மாற்றங்களுக்கான தொழில்நட்ப வழிகாட்டல் வழங்கி பயன்படுத்தல், வினைத்திறனில மேம்பாட்டைஉறுதிப்படுத்தல்
8. பசுமை உற்பத்திகள் மற்றும் சேவைகளின் தர உத்தரவாதத்தை உறுதிப்படுத்தல்
9. பேண்தகுதன்மையை நோக்கி மனப்பாங்கு, நடத்தை மற்றும் வாழ்க்கைமுறை மாற்றங்களை மேற்கொள்வதற்கு நுகர்வோரைத் தூண்டுவதற்கு SCPமிகச் சிறந்த வழகக்கங்கள் தொடர்பாக தொழில்நுட்ப சான்றுகள், கல்வி மற்றும் விழிப்புணர்வு ஆகியவற்றை வழங்குதல்.

10. தொழில்நுட்ப வங்கிகள், விழிப்புணர்வு ஊக்குவிப்பு மற்றும் அனைத்துத் துறைகளையும் வலையமைப்புக்கு உட்படுத்தல் ஆகியவற்றிற்கு ததொதொ ஐப் பிரயோகித்தல்

### B.3 கொள்கை இலக்குகள்

1. கைத்தொழில்களுக்கான வாழ்க்கை வட்ட அணுகுமுறையை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு வசதியேற்படுத்தல்
2. உற்பத்தி வடிவமைப்பு நடைமுறையில் SCP கோட்பாடுகளை இணைத்துக்கொள்ளல்.
3. விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப சாதனங்களை கைத்தொழில்களுடன் பகிர்ந்துகொள்வதற்கான பொறிமுறை தாபிக்கப்படுதல்.
4. கைத்தொழில்கள், சில்லறை வியாபாரிகள் மற்றும் நுகர்வோர் ஆகியோருக்கு பசுமை லேபிள் நியமங்கள் அறிமுகப்படுத்தப்படல்
5. வளங்களுக்கு விலையிடுவதற்கான முறையியல் அறிமுகப்படுத்தப்படல்
6. உயிர்ப் பன்மைத்துவ மற்றும் சூழல் முறைமைகள் சேவைகளை பெறுமதியிடலுக்கான முறையியல் அறிமுகப்படுத்தப்படல்.
7. ICT யினால் உதவப்படும் தொழில்நுட்ப வங்கிகள் நிறுவப்படல் மற்றும் வலையமைப்பு அறிமுகப்படுத்தப்படல்
8. முன்னேற்றததை அடையும் SCPகளை மதிப்பிடுவதற்கு முக்கிய சாதனை சுட்டிகள்(KPI) தாபிக்கப்படுதல்
9. முன்னேறும் மட்டங்கள் கொண்ட (வெங்களம் - வெள்ளி- தங்கம்) SCP சாதனைகளை மதிப்பிடுவதற்கும் அங்கீகரிப்பதற்குமான தேசிய திட்டம்

## C பொதுப் பெறுகை

### C.1 கொள்கை கோட்பாடுகள்

பேண்தகு பொது பெறுகை உரியமுறையில் புரிந்துகொள்ளப்பட்டு பிரயோகிக்கப்படுதல்

### C.2 கொள்கை கூற்றுகள்

1. பேண்தகு பொது பெறுகை(SPP) மீது அரசாங்க துறை நிறுவனங்களின் திறனை கட்டியெழுப் புதலும் வலுவூட்டுதலும்.
2. சகல துறைகளிலும் அத்துடன் கணிசமான தாக்கங்களைக் கொண்டிருக்கும் ஒவ்வொரு உற்பத்திக்கும் பேண்தகு பொது பெறுகை வழக்கங்களை பிரயோகித்தல்

### C.3 கொள்கை இலக்குகள்

1. 2020 ஆம் ஆண்டிற்குள் சம்பந்தப்பட்ட துறைகளில் பேண்தகு பொதுப் பெறுகையை(SPP) ஊக்குவிப்பதற்கான நிர்வாக மற்றும் சட்ட வரைச்சட்டகங்கள் தாபிக்கப்படுதல்
2. கணிசமான சூழல் தாக்கங்களைக் கொண்ட முக்கிய உற்பத்திப் பிரிவுகளுக்கான வாழ்க்கை வட்ட தரவுத் தளம் 2025 ஆம் ஆண்டிற்குள் உருவாக்கப்படல் அல்லது நவீனப்படுத்தப்படல்
3. 2020 ஆம் ஆண்டிற்கு முன்னர் கணிசமான தாக்கங்களைக் கொண்ட சம்பந்தப்பட்டத் துறைகளில் குறைந்தது 5 முக்கிய உற்பத்திப் பிரிவுகளிலும் 2030 ஆண்டிற்குள் குறைந்தது 50% உற்பத்திப் பிரிவுகளிலும் SPPஇன் அமுலாக்கத்தை உறுதிப்படுத்தல்.